உதயன்
Uthayan - A lively National Tamil Daily
சுடர்: 30 கதிர்: 061 வள்ளுவர் ஆண்டு: 2046
தை 12, திங்கட்கிழமை 26.01.2015

வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## கடலில் வந்த மிதவையால் பரபரப்பு



கொழும்பு, ஜன.26
வடமராட்சி கிழக்கு, உடுத்துறைக் கடற்பரப்பில் நேற்று சர்வதேச கடல் எல்லைகளை அடையாளமிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் மிதவையொன்று கரையொதுங்கியது. அதையடுத்து அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது.
குறித்த பொருள் பற்றி அறிந்திராததால், பொது மக்கள் பதற்றத்துடனும் பரபரப்புடனும் காணப்பட்டனர். பெருமளவான மக்கள் பக்.25

# 100நாள் திட்டத்தை அனைவரும் ஆதரியுங்கள்

### அனைத்து அரசியல் கட்சிகளிடமும் மைத்திரி பகிரங்க கோரிக்கை



கொழும்பு, ஜன. 26
தன்னுடைய 100 நாள் வேலைத் திட்டத்தை ஆதரிக்கும்படி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்நேற்று பகிரங்க அழைப்பு விடுத்தார்.
அவரது சொந்தத் தொகுதியான பொலன்னறு வையில் நடந்த கூட்டத்தில் மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்காமல் விட்ட மக்களைத் தான் ஒருபோதும்பழிவாங்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.
ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்கும் நிலை ஒன்றுதோன்றினால்,தானதுஉயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற பக்.25

## ஐ.நாவை எதிர்கொள்ள கொழும்பு புது வியூகம்

### ஆணையாளருடன் பேச விரைந்தார் ஜனாதிபதியின் பிரதிநிதி

கொழும்பு, ஜன. 26
போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது உறுதியாகியுள்ள நிலையில், ஜெனிவாத் தொடரைச் சமாளிப்பதற்காக புதிய அரசு நேரடியாகக் களமிறங்கியுள்ளது.
இதுகுறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன் பேசுவதற்கு, ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஜயந்த தனபால ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.
எதிர்வரும்மார்ச்மாதம்ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அதில் இலங்கையின் பக்.25

> “ஜனாதிபதி மைத்திரிபாலவின் பிரதிநிதியாக ஐ.நாவுக்குச் செல்லும், ஜயந்த தனபால, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துப் பேசிய பின்னரே நிலைமை எதுவென்பதைச் சொல்ல முடியும்”
> *–மங்கள சமரவீர*

## மனித உரிமைகள் சபையை மசிய வைக்க அரசு முயற்சி

கொழும்பு, ஜன. 26
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்படும் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மீள்பரிசீலனை செய்யும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை மசிய வைக்க கொழும்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
“எமது நாட்டைப்பொறுத்தவரையில் மார்ச்மாதம்ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு மிக முக்கியமானது – பாரதூரமானது – என்றே நோக்குகின்றோம். அது சவாலானது. அது தொடர்பில்தான் நாம் பணியாற்றி வருகின்றோம். எமது முயற்சிகளுக்குச்சாதகமான பயன் பக்.25

## குழந்தைகள் பால்மா விலையும் குறையும்

கொழும்பு, ஜன.26
குழந்தைகளுக்கான பால்மா உட்பட குழந்தைகளுக்கான உணவுகளின் விலைகள் குறைக்கப்படும் என்று பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.
எதிர்வரும் 29ஆம் திகதி நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு –செலவுத் திட்டத்தில் இந்த விட யங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
அத்துடன் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவுள்ளது என்றும், அரச ஊழியர்களுக்கான சம்பளம் 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (ற)

## பிரதம நீதியரசர் விலகாதுவிடில் நடவடிக்கை

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவியில் இருந்து விலக மறுக்கும் சந்தர்ப்பத்தில் எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு நேற்றுமுன்தினம் கூடிய ஆராய்ந்துள்ளது. பக்.14

## கோத்தாவை கைது செய்க

### வீதிக்கு இறங்கினர் சிங்கள மக்கள்

கொழும்பு, ஜன. 26
சுத்தமான குடிதண்ணீர் கோரிப் போராட்டம் நடத்தியபோது, சூடு நடத்தி கொலை செய்தமைக்கு, நீதி வேண்டி ரத்துப்பஸ்வெல மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர். அதன்போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினர். பக்.25

## வடக்கு பிரச்சினைகளை தீர்ப்பதில் அதிக அக்கறை

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், ஜன. 26
வடக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிக அக்கறை காட்டப்படும் என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
விரைவில் வடபகுதிக்கு வந்து தாம் நேரில் மக்களைச் சந்திக்கவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.
வடக்கு மாகாண மீன்பிடி, பக்.25

## மஹிந்தவின் சதித்திட்டம் உண்மை



பக்கம் 07

## இலங்கையின் அடிவானில் புதியதொரு விடிவெள்ளியாக மைத்திரி

பக்கம் 09

## மேலும் பல கிணறுகளின் நீர் மாதிரி சோதனைக்கு

### தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்

யாழ்ப்பாணம், ஜன. 26
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு கிணறுகளின் குடிதண்ணீர் மாதிரிகள் பரிசோதனைக்காக நேற்று எடுக்கப்பட்டன. அவற்றை பரிசோதனைக்குட்படுத் பக்.25

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி யாகம்

### வடமராட்சியில் நேற்று சிறப்புற நடந்தது



கொழும்பு, ஜன.26
நீண்ட காலமாக விசாரணைகள் ஏதுமின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், மாற்றத்தை ஏற்படுத்திய தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் ஈடேறவும் மாபெரும் யாகம் ஒன்று பக்.25

## வடக்கில் காணியை இழந்தோர் ஜே.வி.பியிடம் முறையிடலாம்

கொழும்பு, ஜன. 26
வடக்கு – கிழக்கு மாகாணங்களில், மஹிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற காணி அபகரிப்புகள் குறித்துத் தம்மிடம் அறிவிக்கலாம் என்று ஜே.வி.பி. கட்சி அறிவித்துள்ளது. அது தொடர்பான தகவல்களைத் திரட்டி அதற்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கப் பாடுபடப்போவதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. பக்.25

## இந்தியா வந்தார் ஒபாமா



பக்கம் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செய்திகள்

## சட்டவிரோத கூட்டு வலைகள் அழிப்பு

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலைக் கடற்பரப்பில் இருந்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட 80 கூட்டு வலைகள் நீதிவானின் உத்தரவுக்கு இணங்க அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட கூட்டு வலைகளை பயன்படுத்தி மீனவர்கள் இறால் பிடிப்பதாகமுல்லைத்தீவுமாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிக்கு தகவல் கிடைத்தது. அதையடுத்துகடந்தபுதன்கிழமை இரவு 9 மணியளவில் அப்பகுதிக்கு சென்ற அதிகாரிகள் அதிகாலை 2 மணிவரை தேடுதல் நடத்தியபோது அநாதரவாக கிடந்த 80 கூட்டுவலைகளைக் கைப்பற்றினர். அவை கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டநீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. அதுகுறித்து விசாரணை மேற்கொண்ட நீதிபதி அவற்றை அழிக்குமாறு உத்தரவிட்டதை அடுத்து அவை அழிக்கப்பட்டன. (ற-115)

## மஹிந்த வருகையின்போது வைக்கப்பட்ட பூச்சாடி களவு

இராணுவத்தினரால் நெல்லியடி வர்த்தகர்களிடம் பணம் அறவிட்டு நெல்லியடி வீதியில் வைக்கப்பட்ட பூச்சாடி நேற்றுமுன்தினம் களவாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு நெல்லியடி மத்திய கல்லூரியின் கட்டடத்திறப்பு விழாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்திருந்த போது, இராணுவத்தினரால் நெல்லியடி வர்த்தகர்களிடமிருந்து தலா 1000 ரூபா வீதம் பணம் அறவிடப்பட்டு வீதியின் இரு மருங்கிலும் பூச்சாடிகள் வைக்கப்பட்டன. அவற்றில் நெல்லியடிச் சந்தியிலிருந்து நெல்லியடி மத்திய கல்லூரிக்கு திரும்பும் வளைவில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3 அடி விட்டமுள்ள பூச்சாடியே காணாமற்போயுள்ளது. (ற-422)

## பொலிஸ் அதிகாரிக்கு சிறை

கொழும்பு, ஜன.26

வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கமல் அமரசிங்கவிற்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நுவரஎலிய ஹோட்டன் தன்ன வன பிரதேசத்தினுள் அத்து மீறி நுழைந்து, கடமையில் இருந்த வனபரிபாலன அதிகாரிகளைத்தாக்கியமைக்காகவே இத்தண்டனை விதிக்கப்பட்டது. (ற)

# மீண்டும் அரசியலில் மஹிந்த பிரவேசம்

கொழும்பு, ஜன. 26

ஜூன் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலுடன் அரசியலில் மீள்பிரவேசம் செய்ய, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த திட்டமிட்டுள்ளார். அவருடன், முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், அவரது சகோதரருமானகோத்தபாயராஜபக்ஷவும் அரசியலில் நேரடியாகக் களமிறங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசினால் நாடாளுமன்றம் எதிர்வரும், ஏப்ரல் மாதம் கலைக்கப்படவுள்ளது. இதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. புதிய அரசியலமைப்பின் பிரகாரம், பிரதமர் தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கப்படும். அதனைக் கருத்தில் கொண்டு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முடிவு செய்திருக்கின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகியுள்ள, மஹிந்த ராஜபக்ஷ புதிய கூட்டணியை அமைத்துப் போட்டியிட திட்டமிட்டுள்ளார். இந்தப் புதிய கூட்டணியில், மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி, பிவித்துரு ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடவுள்ளன.

இந்தக் கூட்டணியில், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவும்களமிறங்கவுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமை தாங்கவுள்ளார். (ற-5)

# இராணுவத்தின் மூலமான சதி உண்மை என்கிறார் மேர்வின்

கொழும்பு, ஜன.26

தேர்தல் ஆணையாளர் அலுவலகம் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட இடங்களின் அதிகாரத்தை பிடிக்குமாறும், அவ்விடங்களுக்குள் நுழையும்போது எந்த இராணுவப் படைப் பிரிவு என்பதை அடையாளம் காண முடியாதபடி சீருடையில் இருக்கும் பதக்கங்களை அகற்றுமாறும் இராணுவத்தினருக்கு கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார். ஆயினும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான தினம் இரவு அலரிமாளிகைக்குசென்றிருந்தவர்களில் சிலர் கோத்தபாயவின் அந்த உத்தரவை ஏற்க மறுத்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பேசியதாக உதய கம்மன்பில கூறுகிறார். தேர்தல் முடிவுகள் வெளியாகி வரும் நேரத்தில் ஏன் அவசரமாக ஊரடங்குச் சட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும்?. ஏன் இந்த குழப்பம்?

மட்டக்குளி ரொக் ஹவுஸ் முகாமிற்கு 3 ஆயிரம் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்தனர். நியூன் ஹெல்ல என்பவரும் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஒருவரும் அங்கு இருந்தனர்.

சீருடையில் உள்ள சின்னம் மற்றும் தொப்பியில் உள்ள சின்னம் என்பவற்றை அகற்றுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அவை இருந்தால், எந்தப் படைப் பிரிவு என்பதை அடையாளம் கண்டு விடலாம் என்பதே அதற்கு காரணம். எனினும் அலரி மாளிகையில் அந்த நேரத்தில் இருந்த சிலர் இராணுவ சதித்திட்டத்தை ஏற்க மறுத்தனர். இந்த சம்பவத்தை உறுதிப்படுத்த சாட்சியங்கள் இருக்கின்றன.– என்றும் மேர்வின் சில்வா கூறியுள்ளார். (ற)




கிளிநொச்சி, பொன்நகர் மத்தி, அறிவியல் நகர் மகளிர் அமைப்புக்கான அறிவுமதி விளையாட்டு மைதானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த மைதானம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தால் 'எல்லோருக்கும் கல்வி' என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

## சைவசமய மறுமலர்ச்சி விழா சனியன்று சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஜன. 26

உலக சைவத் திருச்சபையின் 'சைவசமய மறுமலர்ச்சி விழா 2015' நேற்றுமுன்தினம் சனிக்கிழமைநல்லூர்நடராசாபரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வை உலக சைவத்திருச்சபையின் பாரதத் தலைவர் இராமநாதபுரம் மன்னர் பரம்பரையைச் சேர்ந்த என்.குமரன் சேதுபதி மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர், "இலங்கை மண் ஆளுமை மிக்கது. ஆன்மிகத்திற்கு உகந்தது. இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு வந்து எங்கள் சிவாலயங்கள் அனைத்தையும் தரிசியுங்கள் சைவத்தையும் தமிழையும் போற்றக்கூடிய மன்னர்கள் வழியில் வந்த நான் உங்களை அங்கு வரச் சொல்கின்றேன். "– என்று தெரி வித்தார்.

உலக சைவத் திருச்சபைத் தலைவரும்கடைாபெரியசிவன்ஆலய தர்மகர்த்தாவுமான கலாநிதி. அடியார் விபுலானந்தா நிகழ்வு அறிமுக உரையை நிகழ்த்தினார். நிகழ்வில் மன்னர் குமரன் சேதுபதிக்கு பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பொன்னாடைபோர்த்துக்கௌரவித்தார்.

வரவேற்பு நடனம் மற்றும் சைவத் தமிழ் பாமாலை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. கலாபூஷணம் கு.சரவணபவானந்தன் ஜே.பி. பாரத சைவத் துறைத்தலைவர்சரவண மாணிக்க வாசக சுவாமிகள் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ற-7)

## சிக்கிய வாகனங்கள் கழித்துவிடப்பட்டவை

### முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன.26

புறக்கோட்டை சிறிஜயவர்த்தனபுர பல்பொருள் கூட்டுறவு நிலையத்திற்கு சொந்தமான இடத்தில் நடத்தப்பட்டு வந்த வாகனத் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்ட வாகனங்கள்சேவையில் இருந்து நீக்கப்பட்டவை என்றுமுன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான புல்லட் புரூப் சொகுசு கார்கள் உட்பட 53 வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அந்தப் பகுதியில் இருந்த வாகனங்கள் அதி உயர் பாதுகாப்புடையவை என்பதால் சந்தைகளில் விற்கவோ அல்லது ஏலத்தில் விடவோ அனுமதிக்கப்படவில்லை. அவற்றை நிறுத்தி வைப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் அவற்றைகுறித்தஇடத்தில்நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. "– என்று தெரிவித்துள்ளார். (ற)



# முத்தம் வேண்டாம்

அந்தக் காலத்தில் முத்தக்காட்சி வந்தால் கதாநாயகன், கதாநாயகி மரத்துக்கு பின்னால் சென்றுவிடுவார்கள். குறிப்பால் உணர்த்தும் காட்சியாக மட்டுமே இருந்தது.

இப்போது 'லிப் டு லிப்' என்பது ஹொலிவூட் திரைப்படங்களுக்கு இணையாக பொலிவூட் திரைப் படங்களிலும் படமாக்கப்படுகிறது. அதில் நடிக்க பல நடிகைகள் தயாராக இருக்கின்றனர்.

ஆனால், முத்தக்காட்சிக்கு ஹன்சிகா எதிர்ப்பாளர்தான். ஆனால் அதற்கு காரணம்தான் வேறு சொல்கிறார். 'லிப் டு லிப்' முத்தக்காட்சி என்பது எல்லா மொழிப்படங்களிலும் சகஜமாகிவிட்டது. அது போன்ற காட்சிகளில் நடிப்பீர்களா என்று அவரிடம் கேட்டால், 'லிப் டு லிப்' மற்றும் நெருக்கமான காட்சிகளில் நடிக்கும்போது பக்றீரியா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் உடல்பாதிப்பு ஏற்படும். எனவே அதுபோன்ற காட்சிகளில் நான் நடிக்க மாட்டேன்' என்கிறார் ஹன்சிகா.

**ஏமாத்துறது தப்புன்னு புரியிறதுக்கே அவன் ஒருத்தன்கிட்ட பெருசா ஏமாற வேண்டியிருக்கு**




தேவாலயத்தில் திருமணம் நடந்து கொண்டிருந்தது. வந்திருந்தவர்களில் ஒரு சிறுமி, தனது அம்மாவிடம் கேட்டாள்,

'அம்மா, ஏன் கல்யாணப் பெண் வெள்ளைக் கலர் கவுன் போட்டிருக்கு?'

'வெள்ளைக் கலர் மகிழ்ச்சிக்கு அடையாளம். இன்றைக்கு அந்தப் பெண்ணுக்கு வாழ்க்கையிலே சந்தோஷமான நாள் இல்லையா? அதனால்தான் வெள்ளைக்கலர் கவுன் போட்டிருக்கு'

'அப்ப, மாப்பிள்ளை ஏன் கறுப்புக் கலர் கோட் சூட் போட்டிருக்காரு?'

'??????'

இதுக்கு உங்கள் யார்கிட்டயாவது பதில் இருக்கா....?



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**மச்சான்...காதலை விலை கொடுத்து வாங்க முடியாது.:**



**ஆனால், அதை மெய்ன்ட்டெய்ன் பண்ண நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கும்...!**






## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

துருவன் வித்யா

**மேடம்**: குடும்பத்தில் இருந்த பிரச்சினை குறையும். அடுத்தவர்களுக்காக எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்**: வழக்கத்தை விட கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றிபெற தடைகளைத் தாண்டி படிக்க வேண்டி இருக்கும்.

**மிதுனம்**: வீண் அலைச்சல், காரிய தாமதம் போன்றவை ஏற்படலாம். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவதும் நல்லது. காரிய அனுகூலம் ஏற்படும். எதிர்பார்த்த நன்மை உண்டாகும்.

**கடகம்**: நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசு மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும்.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள்.

**கன்னி**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சுபகாரியங்கள் கொண்டாட்டங்கள் இருக்கும். பெரியோர் மூலம் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது.

**துலாம்**: பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை செய்து முடிப்பீர்கள், கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**விருச்சிகம்**: தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளைச் செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவார்கள். உயர் பதவிகளும் கிடைக்கக்கூடும்.

**மகரம்**: குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். எல்லா வகையிலும் நன்மை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் கூறியதை கேட்டு அதன்படி நடப்பது ஆறுதலைத் தரும்.

**கும்பம்**: தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும், தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக முடியும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கி முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்**: வீண் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயற்படுவது நன்மை தரும்.

# செய்திகள்

## தியான மண்டப இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.26

கைதடி முதியோர் இல்ல தியான மண்டபத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய முதியோர் செயலகத்தின் நிதி உதவியுடன் இந்த தியான மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த செயலகம் முதற்கட்ட நிர்மாணப்பணிகளுக்கெனபத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியிருந்தது. இந்த நிலையில் தற்போது இரண்டாம் கட்டப் பணிகளுக்கென இருபது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியை பயன்படுத்தி இந்த தியான மண்டபத்தில் இரண்டாம் கட்டத்துக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் இறை வழிபாட்டுக்காக இந்த தியான மண்டபம் தனியாக அமைக்கப்பட்டு வருகின்றது. (வ-17)



தேசிய நீர் வடிகாலமைப்புச் சபைக்கென பண்ணையில் ஐந்து மாடிகளை கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்துக்கான பால்காய்ச்சும் சமய நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கட்டடத்துக்கான நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றதும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் அந்தக் கட்டடம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (வ-17)

## முதலாம் வகுப்பில் மாணவர்ரை இணைக்க பணம் அறவிடத் தடை

கொழும்பு, ஜன.26

முதலாம் ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போதே அல்லது அதற்குப் பின்னரோகூட எந்த விதத்திலும் பணம்அறவிடப்படுவதற்குத்தடை விதித்துப் புதிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய சட்டங்களை உள்ளடக்கியுள்ள இந்த சுற்றறிக்கை இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். பெற்றோர்களிடமிருந்துதொடர்ச்சியாகக்கிடைத்து வரும் முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு அந்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ - 22)

## கணவன்,மனைவி விபத்தில் காயம்

தென்மராட்சி, ஜன.26

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பொருள்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லான்ட்மாஸ்டருடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

மகளின்திருமணஅழைப்பிதழை உறவினர்களுக்கு வழங்குவதற்காக சென்றவேளையில் மீசாலையில் நேற்று அதிகாலையில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த கிளிநொச்சி தொண்டமான் நகரைச் சேர்ந்தசிதம்பரப்பிள்ளை யோகராசா (வயது-58) அவரது மனைவியான யோகராசா கனகரஞ்சினி (வயது-51) ஆகியோர்சாவகச்சேரிஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லான்ட்மாஸ்டருக்கு வெளிச்சம் இல்லாததால் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருக

### உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூ. ச. சமாசம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.குடாநாட்டில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குகள் அறுவடை செய்யப்படும் காலத்தில் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்று உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தலைமையிலான குழுவினர் அரச அதிபரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

தற்போது குடாநாட்டில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குகள் பெரும்பாலும் அடுத்த மாத நடுப் பகுதியில் அறுவடை செய்யப்படவுள்ளன. அறுவடைசெய்யும் உருளைக்கிழங்கை சதொச



விற்பனை நிலையம் ஊடாக சந்தைப்படுத்திவிவசாயிகளுக்கு கொடுப்பதற்கு யாழ்.அரச அதிபர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அறுவடை செய்யும் நேரத்தில் உருளைக்கிழங்குகள் அதிகளவு சந்தைக்கு வந்தால் அதன் விற்பனை பெரும் வீழ்ச்சியடையலாம். அதனால் செய்கையாளர்கள் பெரும் நஷ்டப்படலாம். இதைத் தவிர்ப்பதற்கு யாழ்ப்பாணத்து உருளைக்கிழங்கை தெற்கே சந்தைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.(ற-17)

## சுழிபுரம் பகுதியில் இயங்குகிறது மகளிர் அபிவிருத்தி நிலையம்

சுழிபுரம், ஜன.26

இதுவரை காலமும் வட்டுக்கோட்டை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்த வலிகாமம் மேற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இருந்து சுழிபுரம் பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

பெரியதம்பிரான் கோயிலடியிலுள்ள சுழிபுரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மேற்படி மகளிர் அபிவிருத்தி நிலையம் தற்போது இயங்கி வருகின்றது.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆறுமாத காலப்பயிற்சியான தையல் கலையும் ஆடை வடிவமைப்பும் மற்றும் மூன்று மாத காலப் பயிற்சி நெறியான கேக் ஐசிங் மற்றும் ஒப்பனைக் கலைப் பயிற்சி என்பனவும் இந்தப்பயிற்சிநிலையத்தில்வழங்கப்படவுள்ளன. (ஓ - 51)

# பெண்ணின் சாமர்த்தியத்தால் அபகரிப்பு முயற்சி முறியடிப்பு

கரணவாய், ஜன. 24

உதவி செய்வதுபோல் மோட்டார் சைக்கிளில் வயோதிப் பெண்ணை ஏற்றிச் சென்று அவரிடம் இருந்த பணத்தையும் பொருளையும் அபகரிக்க நினைத்த திருட்டு ஆசாமியின் தந்திரம் பெண்ணின் முயற்சியால் முறியடிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம்வெள்ளிக்கிழமை கரணவாய் உப்பு வல்லை வீதியில் இடம்பெற் றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;

வெள்ளிக்கிழமை காலை ஆவரங்கால் சிவன் கோயில் பஸ் தரிப்பு நிலையத்தில் சுமார்45 வயதுடைய பெண்ணொருவர் பஸ்ஸுக்காக காத்து நின்றுள்ளார். அப்போது நாகரிக உடையணிந்து கறுத்த தலைக்கவசம் அணிந்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அந்தப் பெண்ணுக்கு அருகில் சென்று அவர் செல்ல வேண்டிய இடம்தொடர்பாகவிசாரித்துள்ளார்.

அப்போது குறித்த பெண் தான் நெல்லியடி செல்வதற்கான பஸ்ஸுக்காக காத்து நிற்பதாகக் கூறியுள்ளார். அதற்கு அந்த இளைஞர் தான் அங்குதான் செல்கின்றேன் தன்னுடன் வருமாறு அழைத்துள்ளார். முதலில் அவர் செல்ல மறுத்த போதும் பின்னர் மீண்டும் மீண்டும் கேட்டதால் ஒருவாறு சம்மதித்து இளைஞனின் மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றுள்ளார்.

குறித்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளை நெல்லியடி நோக்கிச் செலுத்தாது ஆள்கள் நடமாட்டம் அற்ற வல்லை மண்டான் வீதிக்குச் சென்றுள்ளான். அதனால் பதற்றமடைந்த பெண், தான் செல்லவேண்டிய பாதையை விடுத்து ஏன் இதனூடாகச் செல்கின்றாய் என்று கேட்டுள்ளார்.

அப்போது திடீரென பெண்ணின் இடுப்புப் பகுதியை இறுகப்பற்றிய இளைஞன் சத்தம் போடாமல் இரு போட்டால் மோட்டார் சைக்கிளிலிருந்து தள்ளிவிழுத்துவேன் என்று எச்சரித்துள்ளான்.

அதன்பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட பெண் குடிமனையுள்ள பகுதிக்கு மோட்டார் சைக்கிள் சென்ற போது பெரும் கூச்சலிட்டவாறு மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்துள்ளார். பெண் கூச்சலிட்ட சத்தத்தைக் கேட்டு அருகில் இருந்தவர்கள்ஓடிவரவேதிருட்டு ஆசாமி தப்பி ஓடிவிட்டான். (வ-108)

## வெங்காயச் செய்கையில் வலி. கிழக்கு விவசாயிகள்

யாழ்ப்பாணம்,ஜன.26

வலி.கிழக்கு பிரதேசத்தில் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வத்தைக் காட்டியுள்ளனர்.

தற்போதைய போகத்தை பயன்படுத்தி விவசாயிகள் கூடுதலான வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், ஊரெழு, நவக்கிரி, மாசிவன், புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளில் விவசாயிகள் கூடுதலான வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே பயிரிடப்பட்ட இந்த வெங்காயப் பயிர்கள் தற்போது நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை கடந்த வருட இறுதியில் சிலர் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். திடீரென பெய்த மழையால் வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி பழுதடைந்தன.



இதன் காரணத்தினால் இந்தச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்தனர்.

எனினும் தற்போது அதிகளவிலான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கூடுதலான விவசாயிகள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டும் உள்ளனர். (வ–17)

# பஸ் கட்டணச் சீட்டில் விவரங்களை எழுதுக

### யாழ். மாவட்ட தூர சேவை பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.26

பஸ்களில் வழங்கப்படும் கட்டணப் பற்றுச்சீட்டில் பயணிகள் பஸ்ஸில் ஏறும் இடம் மற்றும் இறங்கும் இடம் என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட தூர சேவை பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சிவராசா சிவபரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட தூர சேவை ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டை மற்றும் கடன் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"கட்டணச் சீட்டுக்களில் இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டால் பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் குறைக்க முடியும். பயணிகளிடம் மேலதிக கட்டணங்களை அறவிட வேண்டாம். அவ்வாறு அறவிடப்படும் பட்சத்தில் நடத்துநர், ஓட்டுநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–106)

## தென்மராட்சியில் 9 பேருக்கு டெங்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வாரம் 9 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி சுகாதார மருத்துவமனை அதிகாரி பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் இருவர் கொழும்பு சென்று திரும்பியவர்கள் என்றும், ஏனைய 7பேரும் யாழ்ப்பாணத்துக்கு பல்வேறு தேவைகளுக்காகச் சென்று தங்கி விட்டு திரும்பியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி மாதத்தில் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் 42 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 5 பேர் தவிர்ந்த ஏனைய 37 பேரும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வேளையில் நுளம்பால் கடியுண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ–9)



யாழ். கோவில் வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தின் முன்பக்கம் புதிய ஜனாதிபதி மைத்திரிபாலவின் உருவப்படம் கொண்ட புதிய பதாகை இணைக்கப்பட்டுள்ளது. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் புதிய ஜனாதிபதிக்கு தனது ஆதரவை அறிவித்திருந்தார். இந்த நிலையில் ஏற்கனவே கட்சியின் அலுவலக வாயிலில் இருந்த முன்னாள் ஜனாதிபதியின் உருவப்படம் கொண்ட பதாகை அகற்றப்பட்டு அங்கே மைத்திரி இடம்பிடித்துக் கொண்டார். (ஒ–வ–17)

## சமுர்த்திக் கொடுப்பனவு குறித்து மீளாய்வுசெய்க

### சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் வலியுறுத்து

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் உதவிகள் வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று வியாழக்கிழமை இடம்பெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சன் தனி நபர் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களின் பரிந்துரை பெறாமல் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் தன்னிச்சையாக பயனாளிகளைத் தெரிவு செய்து சமுர்த்தி முத்திரைகள் மற்றும் கொடுப்பனவுகள் உதவிகளை வழங்கியுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் சமுர்த்தி உதவிகள் கிடைக்காமல் தொடர்ந்தும் வறுமை நிலையில் காணப்படுகின்றனர்.

மீளாய்வு தொடர்பாக பிரிவுகளுக்குச் செல்லும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கூட பயனாளிகள் தெரிவுகளில் பாரபட்சம் காட்டியுள்ளனர். தற்போது சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் உதவிகள் வழங்குவது தொடர்பான மீளாய்வில் கிராம அலுவலர்களும் சென்று தகுதியுள்ள பயனாளிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

இந்த பிரேரணையை உறுப்பினர் சிறிதரன் வழிமொழிந்ததை அடுத்து சபை ஏற்றுக்கொண்டது. (வ–9)

## கைவிடப்பட்ட நிலையில் இரு சைக்கிள்கள் மீட்பு

பருத்தித்துறை நகரப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் இரு சைக்கிள்கள் திங்கட்கிழமை ரோந்து சென்ற பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கான சைக்கிள் ஒன்றும் பெண்களுக்கான சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரு சைக்கிள்களின் உரிமையாளர்கள் அடுத்த 6 மாதங்களுக்குள் உரிமை கோருமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து அவை இரண்டும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ–109)

## மாணவர்களை இணைப்பதில் புள்ளி அடிப்படையில் பாகுபாடு

### தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.26

கல்வித் தரத்தில் ஓரளவு குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களை தமது பாடசாலைகளில் சேர்க்காது வேறு பாடசாலைகளுக்கு அனுப்பும் செயற்பாடு சில பாடசாலைகளில் காணப்படுகின்றது. தரம் 9 மாணவர்கள் கூட இந்த நிலைக்கு உள்ளாகின்றனர் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ் தெரிவித்தார்.

தீவக வலய தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பாடசாலைகளை நம்பிவரும் மாணவர்களை இடைநிறுத்துவது ஏற்புடையதல்ல; ஆரம்பக் கல்வியில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான வழிப்படுத்தலைக் காட்டவேண்டும்.

வடக்கு மாகாண சபை இந்த விழாவைத் தீவகத்தில் நடத்த முன்வந்தது பாராட்டுக்குரியது என்று தீவக கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ–7)

## தென்மராட்சியில் மேலும் சிலருக்கு மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி, ஜன. 26

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஹல்ப் ஏஜ் நிறுவனத்தினரால் கடந்த செப்ரெம்பர் மாதம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடத்தப்பட்ட விசேட கண் பரிசோதனை முகாமில் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களில் ஆறு பேருக்கான மூக்குக் கண்ணாடிகளே குறித்த நிறுவனத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரிசோதனையின்போது கண் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களில் ஏற்கனவே 63 பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் அனுப்பி வைக்கப்பட்டு உரியவர்களுக்கு வழங்கியதாகவும் மேலும் 6 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வந்துள்ளதாகவும் உரியவர்களை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் அறிவிக்கப்பட்டது.

கே.கந்தசாமி – மட்டுவில் தெற்கு, கே.யோகநாயகி – மந்துவில் வடக்கு, என். சோமகலாதேவி – கச்சாய் தெற்கு, எஸ். அருந்தவராணி – கொடிகாமம், எஸ்.சத்தியமூர்த்தி – கச்சாய் வடக்கு, கே. இராசம்மா – மந்துவில் மேற்கு ஆகிய 6 பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (வ–9)

# செய்திகள்

## சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்த 82 நிறுவனங்கள்

### குடாநாட்டில் கடந்த ஆண்டில்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டில் 82 தொழில் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்.குடாநாட்டில் அநேகமான தொழில் நிறுவனங்கள் இந்த ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் உள்வாங்கி பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு சகல நிறுவனங்களையும் இணைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு நிறுவனங்களின் இயக்குநர்கள் முழுமையான ஆதரவை தொழில் திணைக்களத்துக்கு வழங்கியிருந்தனர்.

குறிப்பாக இந்த ஊழியர் சேமலாபநிதித்திட்டத்தின்கீழ்தொழில் நிறுவனங்கள் உள்வாங்கப்பட்டதால் அதில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

எதிர்காலத்தில் அவர்கள் தமது பணியில் இருந்து ஓய்வுபெற்று செல்லும்போது குறிப்பிட்ட தொகைப் பணத்தை அவர்கள் பெறுவதன் மூலம் அவர்களின் எதிர்காலம் சுயமாக அமையும்.

தொழில்திணைக்களத்தால்மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் தொழில் நிலையங்களை இணைக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். 2015ஆம் ஆண்டில் குறிப்பாக வட மாகாணத்தில் தொழில் நிலையங்கள் அனைத்தையும் இந்தத் திட்டத்தில் இணைத்துவிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ–17)



நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 2014 ஆம் வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மேலைத்தேய வாத்தியக் கருவிகளை அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வழங்கினார். (வ–9)

## பருத்தித்துறை டிப்போ முன் பாதசாரிகள் கடவை தேவை

கரணவாய்,ஜன.26

பருத்தித்துறை டிப்போவுக்கு முன்பாக அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதால் டிப்போவுக்கு முன்பாகப் பாதசாரிகள் பாதுகாப்புக்கடவை (மஞ்சள் கோட்டுக் கடவை) அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பருத்தித்துறை – யாழ். பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள இ.போ.ச. டிப்போவுக்கு முன்பாக அண்மைக்காலமாக அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

டிப்போவுக்கு முன்பாக பாதையில் வளைவு ஒன்று காணப்படுவதால்டிப்போவுக்கு உள்ளிருந்து வெளியேயும்வெளியில்இருந்து உள்ளேயும் பஸ்கள் செல்லும்போது பிரதான வீதியினூடாக பயணம் செய்பவர்களுக்கு அது தெரியாத காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அதுமட்டுமல்லாது டிப்போவுக்குச் செல்லும் பஸ்கள் சமிக்ஞை இன்றித் திருப்பப்படுவதால் பிரதான வீதியூடாகப் பயணம் செய்வோர் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு டிப்போவுக்கு முன்பாகவுள்ள பிரதானவீதியில் மஞ்சள் கோட்டுக்கடவை அமைக்குமாறு போக்குவரத்தில் ஈடுபடுவோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(வ–108)

## விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம்.ஜன.26

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து வடமாகாண சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 6 விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்.

வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் 80 ஆயிரம் ரூபா நிதியிலும், விந்தன் கனகரட்ணம் 40 ஆயிரம் ரூபா நிதியிலும் உபகரணங்களை வழங்கினர்.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம், கொழும்புத்துறை ஜெட் லைனஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ–14)

## கட்டாக்காலி நாய்களை மருத்துவர் பரிந்துரையுடன் அழிக்க முடிவு

தென்மராட்சி, ஜன.26

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகவும்,நோய்களுடனும்காணப்படும்நாய்கள்பிடிக்கப்பட்டு கால்நடை மருத்துவரின் பரிந்துரையுடன் அழிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களும் நோய்களால் பீடிக்கப்பட்ட நாய்களும் பெருமளவில் காணப்படுகின்றன. அவற்றால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை தினமும் எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் தமது வளர்ப்பு நாய்களுக்கு நகர சபையால் வழங்கப்படும் உரிமத் தகடைப் பெற்று பொருத்து மாறும் தவறின் வீதியில் அவை காணப்பட்டால் கட்டாக்காலி நாயாக கணிக்கப்பட்டு பிடிக்கப்படும் என்றும் பிடிக்கப்படும் நாய்கள் எந்தக் காரணம் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன.26

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ஆள்களில்லாத வீடொன்றில் கசிப்பு உற்பத்தி செய்த பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸார் திடீர் பரிசோதனை நடத்தி கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தவேளையில்பெண்ணைக் கைது செய்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு மற்றும் உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருள்களையும் கைப்பற்றி நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 50 ஆயிரம்ரூபா அபராமும் ஒரு வருடத்துக்கான சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (வ–9)

## போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு அபராதம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகனச் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை அபராதம் விதிக்கப்பட்டது. ஆபத்தான முறையில் வீதியில் சென்ற வாகனத்தை சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போது அதனைப் பொருட்படுத்தாமல் சென்றதால் அதனைத் துரத்திச் சென்று பிடித்தனர்.

ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களை எதிரி ஏற்றுக்கொண்டதால் இரு குற்றங்களுக்குமாக 6ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனமொன்றின் சாரதிக்கு பாதசாரிகள் கடவைக் கோட்டில் வைத்து மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட குற்றத்துக்காக 6ஆயிரம் ரூபாவும், கடவைக் கோட்டில் வைத்து வாகனத்தை முந்த முற்பட்டமை ஆபத்தான நிலையில் வாகனத்தைச் செலுத்தியமை, வாகன வரிப் பத்திரமின்மை ஆகிய குற்றங்களுக்காக 7 ஆயிரம் ரூபாவும் தொலைபேசியில் உரையாடிய வண்ணம் வாகனத்தை செலுத்தியதற்காக 3ஆயிரம் ரூபாவும் வெவ்வேறு வாகனச் சாரதிகளுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மேற்குறித்த அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# மஹிந்தவின் சதி உண்மையானதே

## அடித்துக் கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஜன.26

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான தினத்தன்று இராணுவத்தைக் கொண்டு மேற்கொள்ளவிருந்த சதித் திட்டம் உண்மையானதே என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

"இராணுவத்தைப் பயன்படுத்தி ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சியானது உண்மையானதே. சாதாரண அதிகாரிகள் மறுப்பு வெளியிட்ட காரணத்தால் இந்த சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டனர் என்பதைப் பொறுப்புடன் கூற முடியும். வெள்ளவத்தை பாலம், களனிப் பாலம், சிறிகொத்த, றோயல் கல்லூரி, டி.எஸ் சேனாநாயக்க கல்லூரி உள்ளிட்ட பல இடங்களில் இவ்வாறு இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டனர்."– என்றுஅவர் மேலும் தெரிவித்தார்.

"கொழும்பு மாவட்டம் 17 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உயர் இராணுவ அதிகாரிகளிடம் ஒவ்வொரு பிரிவும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. கடைநிலை அதிகாரிகள் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்ட காரணத்தால், கடந்த அரசால் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்தவின் வீட்டு நாய்களுக்கும் 'ஏஸி'!

கொழும்பு, ஜன.26

அலரி மாளிகையில் செல்லப் பிராணிகளாக விலை மதிப்பான 43 நாய்கள் வளர்க்கப்பட்டன என்றும், அவை பராமரிக்கப்பட்ட அறை குளிரூட்டப்பட்டு, ஆடம்பரமாக அறை அலங்கரிக்கப்பட்டிருந்தது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவைதவிர பெறுமதியான 23 அரிய வகை பறவைகளும் ஒரு குதிரையும் இரண்டு போனிக் குதிரைகளும் அலரி மாளிகையில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்டுள்ளன. அலரி மாளிகையில் வளர்க்கப்பட்ட மில்லியன் ரூபா பெறுமதியான மெகோ வகை கிளிகள் இரண்டு கூண்டை விட்டு பறந்து போனதுடன் அவற்றைப் பிடிக்க இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டனர் என்று 2013 ஆம் ஆண்டு ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன.



அத்துடன் முன்னாள் ஜனாதிபதியின் வாகனங்களை பராமரிப்பதற்காக மாத்திரம் கடந்த வருடம் 250 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அதற்கு முன்னர் இவ்விதமான ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியான பேர்டினட் மார்கோஸ் குடும்பத்தினர் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற)




## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ...............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................
அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank
Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கிழக்கில் சமூக நட்புறவு நீடித்து நிலைக்கட்டும்

இலங்கைத் திருநாட்டில் ஆட்சியாளர்களை நிர்ணயிப்பவர்கள் பௌத்த சிங்கள மக்களே. அவ்வாறு நிர்ணயிக்கப்படும் ஆட்சியாளர்களுக்கு சிறுபான்மையோர் கட்டுப்பட்டவர்களாக மட்டுமன்றி அவர்களின் காலில் விழுந்து இணங்கிப் போவதன் மூலம் அவர்கள் போடும் பிச்சைச் சலுகைகளில் மட்டுமே திருப்தி கொள்ள வேண்டும் என்ற வகையில் கடந்த காலத்தில் இருந்து வந்த நிலைமை இன்று முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மையினர் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் இன, மத ரீதியில் சிறுபான்மையோர் ஒன்றுபடும் போது மத்திய அரசை ஆட்டம் காணச் செய்யமுடியும், சர்வாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்தமுடியும், தம் தரப்பிலான கோரிக்கைகளை அழுத்தமாக முன்வைத்து நியாயம் கேட்கமுடியும் என்பவைகளை மட்டுமன்றி, ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தி மக்கள் நலன் சார்ந்த அரசொன்றைப் பதவியில் அமர்த்தவும் முடியும் என்பதைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்தவர்கள் நிரூபித்துள்ளார்கள்.

உண்மையில், அண்மையில் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்கள் மத்தியில் அப்போதிருந்த அரசின் மீது ஏற்பட்டிருந்த விரக்தியும் கோபமுமே ஆட்சி மாற்றத்துக்கு வழிகோலியது அன்றி அவர்கள் மத்தியில் முன்கூட்டியே ஏற்பட்டிருந்த ஒற்றுமை அல்லது ஒப்பந்தம் ஏதும் காரணமாக இருக்கவில்லை. ஆனால் அப்படியானதொரு ஒற்றுமை எதிர்காலத்தில் அவசியம். அதனைத் தமிழ், முஸ்லிம் மக்களும் தலைவர்களும் உணரவேண்டும் என்பதனையும் நடந்து முடிந்த தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

ஒரு சமூகம் பெருமான்மையாக வாழுகின்ற பிரதேசத்தில், சிறுபான்மையாக இருப்பவர்களைக் பெரும்பான்மையோர் அணைத்துக் கொண்டு செயற்படுவது அவசியம்; ஜனநாயகம் வளர்ச்சியடைவதற்கு இது உதவும் - என்று முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒரு சமயம் குறிப்பிட்டிருந்தார்.


இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் உருவாகியுள்ள நிலைமை இதனையே வலியுறுத்துகின்றது. சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் அணைத்துக்கொண்டு முன்னேற வேண்டும் எனும் போது, தமது அதிமுக்கிய உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்றோ ஜனநாயக வழிமுறைகளைக் கைவிடவேண்டும் என்றோ பொருள் கொள்ளமுடியாது.

கிழக்குமாகாண சபையில் பெரும்பான்மைப் பலம் தமக்கிருப்பதால் முதலமைச்சர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகிறது. இது ஜனநாயகம் தழுவிய, சார்ந்த வழிமுறையே.

ஆனால், 2012 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலின் பின்னர், முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்கத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெருந்தன்மையோடும், கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் முக்கிய இரு சமூகங்களுக்கிடையில் சமூக நல்லுறவு தொடர வேண்டும் என்ற முறையிலும் முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்க முன்வந்திருந்தனர். அன்றைய மத்திய அரசுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைத்தது. ஆனால், இப்போது மத்தியில் அந்த ஆட்சியில்லை. எனவே, அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் அல்லது இணக்கப்பாடு அவர்களுடனேயே முடிந்துவிட்டது. இப்போதுள்ள சூழ்நிலை, களநிலைகளை வைத்தே கிழக்குமாகாண சபை ஆட்சியை முடிவு செய்யவேண்டும் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்புகிறது. இந்தத் தருணத்தில், கிழக்கு மாகாணத்தில் நிலையாகவும் ஒருமைப்பாட்டுடனும் வாழ்கின்ற தமிழ் பேசும் இரு சமூகங்களும் தங்கள் எதிர்கால நலனை உத்தேசித்து நியாமான ஒரு தீர்வுக்கு வரவேண்டியது அவசியம்.

தேர்தல்கள் வரும் போகும். பதவிகளும் அவ்வாறே. ஆனால் காலாகாலமாக நிலவிவரும் ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் நட்புறவும் அவ்வாறானவை அல்லவே. அவை தொடர்ந்தும் நீடிக்க வேண்டும். இரு சமூகத்தலைவர்களும் அந்த வகை நாடி, நல்ல முடிவை எடுப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

## ஈரானின் அணுசக்தித் திட்டம் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு



ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்சினைக்கு ஒரு சர்வதேச தீர்வு ஏற்படும் வாய்ப்பு நெருங்கி வருகிறது. இது தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சிறிய அளவிலான முன்னேற்றமே ஏற்பட்டிருக்கிறது என்றாலும், மத்திய கிழக்கின் போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் இது ஒரு முக்கியத் திருப்பமாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய 6 நாடுகள் மற்றும் ஈரான் இடையிலான இந்தப் பேச்சுவார்த்தையில், ஈரானின் சர்ச்சைக்குரிய அணுசக்தித் திட்டங்கள் மற்றும் அதன் மீதான பொருளாதாரத் தடைகள் குறித்து மார்ச் மாத இறுதிக்குள் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது என முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் ஹெரி, ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவேத் ஷெரீப் ஆகியோர் இடையிலான நீண்ட பேச்சுவார்த்தையும் இதில் அடக்கம்.

ஈரானின் அணுசக்தித் திட்டம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. யுரேனியத்தைத் செறிவூட்டும் பணியில் ஈரான் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியதே இத்றகுக் காரணம்.

அணுமின் நிலையம் உள்ளிட்ட ஆக்கபூர்வமான, அமைதியான விடயங்களுக்காகவே யுரேனியத்தைச் செறிவூட்டும் பணியை மேற்கொண்டதாக ஈரான் தெரிவித்தது. ஆனால், அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அதை நம்பவில்லை.

> ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை உள்ள அமெரிக்கா, சீனா உள்ளிட்ட ஐந்து நாடுகள், அவற்றோடு இந்தியா, பாகிஸ்தான், வடகொரியாவையும் சேர்த்து எட்டு நாடுகள் தான் இப்போது அணு ஆயுத பலம் கொண்டவை.

அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன. சர்வதேச அணுசக்தி முகாமை அதிகாரிகள் ஈரானுக்குச் சென்று, அதன் அணுசக்தித் திட்டங்களை நேரடியாக ஆய்வு செய்து, ஓரளவு ஈரானுக்குச் சாதகமான முடிவை அறிவித்தும், அமெரிக்கா அதை ஏற்கவில்லை.

அதைத் தொடர்ந்து, ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன. இந்தத் தடையால் ஈரானின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இருந்து வரும் இந்தப் பிரச்சினையில், அமெரிக்கா உள்ளிட்ட ஆறு நாடுகளின் தலையீட்டைத் தொடர்ந்து, 2013இல் தனது அணுசக்தித் திட்டங்களை தற்காலிகமாக ஈரான் நிறுத்தியது.

அதற்குப் பதிலாக, தன் மீதான பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது. இது தொடர்பாக கடந்த நவம்பரில் இந்த நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், அதில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், மார்ச் மாதத்துக்குள் அரசியல் ரீதியான ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவது என்றும், ஜூலை முதலாம் திகதிக்குள் முழுமையான தீர்வை எட்டுவது என்றும், இப்போது கால வரையறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பெப்ரவரி மாதம் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில், அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரிட்டன் பிரதமர் கமரூன் ஆகிய இருவரும் மிக ஆர்வமாக இருக்கிறார்கள்.

ஆனால், ஒரு சர்வதேச பிரச்சினை முடிவுக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், குடியரசுக் கட்சி உறுப்பினர்களின் ஆதிக்கம் மிகுந்த அமெரிக்க நாடாளுமன்றம், ஈரானுக்கு எதிரான புதிய தடைகளை விதிக்கக் கோரும் பிரேரணையைத் தயாரித்து வருவது பிரச்சினையை சிக்கலாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை முதலாம் திகதிக்குள் இந்த விவகாரத்தில் உடன்பாடு ஏற்படாவிட்டால், ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை விதிக்கக் கோரும் பிரேரணையைக் கொண்டுவரப் போவதாக குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு புதிய தடை விதிக்கப்பட்டால், அது தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையைச் சீர்குலைத்துவிடும் என்றும், மத்திய கிழக்கில் ஆயுத மோதலுக்கு வழிவகுத்துவிடும் என்றும் அதிபர் ஒபாமா கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல, அதற்கும் மேலே சென்று, தடை விதிக்கக் கோரும் புதிய பிரேரணை தயாரிக்கப்பட்டால், அதை தனது வீற்றோ அதிகாரத்தைக் கொண்டு இரத்துச் செய்துவிடுவதாகவும் எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை உள்ள அமெரிக்கா, சீனா உள்ளிட்ட ஐந்து நாடுகள், அவற்றோடு இந்தியா, பாகிஸ்தான், வடகொரியாவையும் சேர்த்து எட்டு நாடுகள் தான் இப்போது அணு ஆயுத பலம் கொண்டவை.

இவை தவிர, வேறு எந்த ஒரு நாடும் புதிதாக அணு ஆயுதம் தயாரித்துவிடக் கூடாது என்பதில் அமெரிக்கா குறியாக இருக்கிறது. சர்வதேச நெருக்கடியையும் மீறி, வடகொரியா அணு ஆயுதத்தைத் தயாரித்து, சோதனை செய்தும் பார்த்த நிலையில், ஈரானும் அந்தப் பட்டியலில் சேர்ந்துவிடக் கூடாது என்பது அமெரிக்காவின் கவலை.

முதன்முதலில் ஜப்பானுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி, வரலாற்றின் கறுப்புப் பக்கங்களில் இடம் பிடித்த அமெரிக்கா, இப்போது அணு ஆயுதத்தைப் புதிதாக எந்த நாடும் தயாரிப்பதைக்கூடத் தடுப்பது ஒருவகையில் முரண் என்றாலும், அனைத்து பிராந்தியங்களிலுமே போர் அபாயம் மிகுந்துவிட்டதால் அது அவசியமானதாகக் கருதப்படுகிறது.

அதேவேளையில், அணுகுண்டு தயாரிக்கத்தான் அணுசக்தியை பயன்படுத்த வேண்டும் என்பதில்லை; அணு மின் நிலையம், அணு மின் சக்தியைப் பயன்படுத்தி போர்க் கப்பலை இயக்குதல் உள்ளிட்ட மின்சாரத் தேவை மற்றும் பாதுகாப்பு விடயங்களுக்கும் அணுசக்தியைப் பயன்படுத்த முடியும். அந்த உரிமை ஏற்கெனவே அணு ஆயுத வல்லமை படைத்த நாடுகளுக்கு மட்டுமே உரியதன்று. மேலும், ஜனநாயக உலகில், எந்த ஒரு நாடும் தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லாதபோது, ஈரானுக்கு மட்டும் ஏன் நெருக்கடி தொடர வேண்டும்?

*நன்றி: தினமணி*

# இலங்கையின் அடிவானில் புதியதொரு விடிவெள்ளியாக

# ஜனாதிபதி மைத்திரி

வந்தியத்தேவர்

"ஒரு ஜனாதிபதி நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும்" என இலங்கையில் முதல் தடவையாகக் கூறியிருப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவாகத்தான் இருக்கும். அதுமட்டுமன்றி, மாகாண சபைகளுடன் நட்புறவுடனும், சுமுகமாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் இலங்கையில் அமைதியும் – சமாதானமும் நிலவ வேண்டுமாயின் அரச செயற்பாடுகளில் நீதியும், நியாயமும் காணப்படல் வேண்டும்.

இந்த நாட்டில் 60வருடங்களுக்கு மேலாக அதாவது சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இற்றை வரை தாங்கள் சுதந்திரமாகவும் உரிமைகள் பெற்றும் வாழ வேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறாத நிலையிலேயே உள்ளன. இதற்கு சிங்களத் தலைவர்களும் அவர்கள் கட்டவிழ்த்துவிட்டபேரினவாதமுமே காரணமாகும். தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இந்த இனவெறி அரசியல் காரணமாக தமிழ்– முஸ்லிம்

நல்கிய தமிழ்– முஸ்லிம் மக்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தருவார் என்ற நம்பிக்கையும் தமிழ் மக்களிடத்தில் காணப்படுகின்றது.

மாற்றத்துக்கான கடமையைத் தமிழ் மக்கள் நிறைவேற்றியுள்ளனர். அவர்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அரசின் முக்கிய கடமையாகும்.

ஜனாதிபதியும், பிரதமரும் இலங்கை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்த விரும்புவதால் அவர்களுடன் இணைந்துள்ள தென் பகுதியைச் சேர்ந்த சிறுசிறு அரசியல் கட்சிகளும் நாட்டின் நலனையும் அனைத்து மக்களினதும் சுபீட்சம் மிக்க எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

பொறுமையாக இருங்கள். உங்கள் எதிர்பார்ப்புக்களை நான்

எதிர்காலத்தில் இடம்இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசின் செயற்பாடுகள் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்வதாக அமையவேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் பாரம்பரிய நம்பிக்கையாகும். தைத் திங்களோடு ஐக்கியம் நிலவப் பிரார்த்திப்போம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நாகரிகமான அரசியல் உருவாக வேண்டும் என்று திட சங்கற்பம் பூணுவதாக பிரதமர் ரணிலும் கூறியுள்ளனர்.



மக்களுக்கேற்பட்ட அழிவுகளும் துன்பங்களும் சொல்லுந்தரமன்று.

மஹிந்த அரசில் மிகவும் மோசமான விளைவுகளைச் சந்தித்த மக்கள் ஒரு மாற்றத்தின் தேவையை உணர்ந்த போதிலும், அந்த மாற்றத்தைத் தமிழர்களே ஏற்படுத்தினர். தமிழ் மக்கள் மஹிந்தவின் கொடுங்கோல் ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழுந்ததன் பயன்களை அனைத்து மக்களுமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாடு தற்போது மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்ட போதிலும் அது நிரந்தரமாக மாற வேண்டுமானால், தமிழர்கள் விடயத்தில் ஜனாதிபதி நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறுக்க முடியாது. நாட்டின் முக்கிய பிரச்சினையாகவும் தீர்க்கப்பட வேண்டியதுமாகவும் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும். தனக்கு ஆதரவு

நிறைவேற்றுவேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கண்டியில் கூறியுள்ளார். இனவாதமும் அராஜக நடவடிக்கைகளும் கொண்ட ஒரு குடும்ப ஆட்சி இந்த மண்ணில் தொடரவேண்டும் என்பது தான் மக்களது எதிர்பார்ப்பு என்று மஹிந்த இன்னமும் கனவில் மிதக்கிறார் போலும். இது ஊழல்களும் மோசடிகளும் மிக்க ஒரு சர்வாதிகாரியின் கனவாகவே காணப்படுகின்றது. ஒரு சதி முயற்சி மூலம் நாட்டின் மன்னராகி சதாம் ஹுசையின் போன்று வாழலாம் எனக் கனவு கண்டவருக்கு அது பகல் கனவாகிவிட எப்படியாவது இனவாதத்தைக் கக்கி மீண்டும் அரசியலில் ஓர் இடத்தைத் தக்க வைக்க அவர் முயல்வது தெரிகின்றது.

மஹிந்தரின் சிந்தனைக்கு தமக்கு எதிர்காலம் பிரகாசமாக இருக்க வேண்டும் என்ற நோக்குடன் தமிழ் மக்கள்

> "தற்போது மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்ட போதிலும் அது நிரந்தரமாக மாற வேண்டுமானால், தமிழர்கள் விடயத்தில் ஜனாதிபதி நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறுக்க முடியாது. நாட்டின் முக்கிய பிரச்சினையாகவும் தீர்க்கப்பட வேண்டியதுமாகவும் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

தமது வாக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

மஹிந்தவின் தோல்விக்கு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பாதிருந்தமையும்முக்கியகாரணங்களில்ஒன்றாகும். அதைத்தென்னிலங்கை அரசியல்வாதிகளும்தற்போது ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

அண்மையில் இங்கு வருகை தந்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களும் அமைதிக்கான தீர்வுக்குப் பங்களிக்கும் வகையில் கிறிஸ்தவர்களும் மாறவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நூறுநாள் வேலைத்திட்டம் சிறந்த முறையில் அமைவதற்குக் கை கொடுப்போம் எனப் பெரும்பாலானவர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிமைகளுடன் கூடிய அபிவிருத்திதான் நாட்டைக் கட்டியெழுப்புவதாக அமையும் என்பதால் வெற்றிகொள்ள முடியாத பலசவால்களையும் வெற்றிக்கொள்ளும் முயற்சியில் வெற்றி பெறத்தக்கதாக அரசு தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தீர்க்க விரும்பாத ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாது நீண்ட காலமாக இருளில் சிக்கிய இலங்கையில் ஆசியாவின் அதிசயமாக ஒரு விடிவெள்ளியென மைத்திரிபால சிறிசேன தோன்றியதை உறுதிப்படுத்த வேண்டும்.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### கலைஞர் தேர்விலும் பாரபட்சமா?

வடமாகாண சபை கல்வி அமைச்சரால் கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக கடந்த வருடம் பத்திரிகையில் தகவல் வெளியிடப்பட்டது. கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபா ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும், இதற்கென ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தலா பத்து கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கலைஞர்களும் தமக்குரிய ஆவணங்களைச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்திருந்தனர். ஆனால் கடந்த வாரம் வெளிவந்த பத்திரிகையைப் பார்க்கும்போது கலைஞர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகஅறிந்து கொண்டோம்.

கலைஞர்களின் சேவைக் காலம், திறமை,பெற்ற விருதுகள், வயது ஆகியனவற்றைப் பார்வையிட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டதா என்பது தெரியவில்லை. கலைஞர்கள் தெரிவில் அரசியல் உள்நுழைந்து தெரிவு செய்யப்பட்டதாக அறிகின்றோம். உண்மை இல்லையாயின் கௌரவ கல்வி அமைச்சர் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் பெயர், விவரங்களை பத்திரிகையில் வெளியிட வேண்டும் என சகல கலைஞர்கள் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றோம்.

*கஷ்டப்பட்ட கலைஞர்.*

### பாதிக்கப்பட்டவர்கள் அனைவருமே முறையிட ஏற்பாடு செய்ய வேண்டும்

யாழ் .பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசியல் தலையீடுகளால் பாதிப்புற்றோர் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தில் முறையிடலாமென யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்தமை தொடர்பான செய்தியொன்று கடந்த 21ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையின் இரண்டாவது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டதை நான் வாசித்தேன்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது ஏனைய அரச திணைக்களங்களில் பணியாற்றியவர்களும் கடந்த காலங்களில் அரசியல் காரணங்களால் பல்வேறு வகையிலும் பழிவாங்கப்பட்டுள்ளனர். பலர்முறையற்ற விதத்தில் இடமாற்றம் செய்யப்பட்டனர். வேறு சிலர் பதவியுயர்வு வழங்கப்படாமல் பழிவாங்கப்பட்டனர். அரச ஆதரவாளர்களின் அச்சுறுத்தல் காரணமாக மனம் உடைந்து வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களும், ஓய்வு வயது வருவதற்கு முன்னரே ஓய்வுபெற்றுச் சென்றவர்களும் நிறையவே உள்ளனர்.

எனவே, இவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களும் முறைப்பாடு தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

*பாதிக்கப்பட்ட அரச ஊழியர்.*

கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## நாய்வாலை நிமிர்த்த முடியாது

பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பணம் வாங்கக் கூடாது. இவ்வாறு, ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் சகல ஊடகங்களையும் ஆக்கிரமிக்கும் செய்தியாக இது இருக்கும். இவ்வாறு பணம் வாங்கக் கூடாது என்று எந்த அதிகாரிகள், ஏன் அமைச்சர்களே சொன்னாலும், அது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தாலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காதுபோல் இருக்கின்றது.

இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறை இருக்கின்றது. அந்த நடைமுறை பெயரளவில் மாத்திரம், குறிப்பிட்ட சில விடயங்களை மாத்திரமே இலவசமாக வழங்குகின்றது. பாடசாலையில் படிப்பதற்கு கட்டணம் செலுத்த தேவையில்லை, சீருடை இலவசம். இவை மாத்திரமே இலவசக் கல்வியின் நேரடி அனுகூலம். ஆனாலும், தவணைக்கு தவணை வசதிக் கட்டணம் என்ற பெயரில் குறித்த தொகைப் பணம் மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. சீருடை இலவசம் என்றாலும், சப்பாத்து ஏனையவற்றை மாணவர்கள் பணம் கொடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் தரம் ஒன்று மற்றும் தரம் ஆறுக்கு மாணவர்களை அனுமதிக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதன்போதே மாணவர்களைப் பாடசாலைக்குச் சேர்ப்பதற்கு ஆயிரக் கணக்கில் பணம் அறவிடப்படுகின்றது. ஒவ்வொரு பாடசாலைகளின் 'தராதரத்துக்கு' ஏற்ப அறவிடப்படும் தொகை மாற்றமடையும். தேசியப் பாடசாலைகள் எப்போதும் லட்சத்தை அண்மித்தே இருக்கும். அத்துடன் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதில், அந்தப் பாடசாலையின் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு செல்வாக்குச் செலுத்தும்.

பாடசாலைக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு பணம் அறவிடக் கூடாது என்று அமைச்சர்கள் தொடக்கம் அதிகாரிகள் வரையில் சொன்னாலும் அதிபர்கள் வாங்கத்தான் செய்கின்றார்கள். இது அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் தெரியும். ஆனாலும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். இவ்வாறு வாங்கும் பணத்தில் அவர்களுக்கும் 'கொமிசன்' செல்வதால் அவர்கள் எவ்வாறு வாய் திறப்பது?

பாடசாலை அதிபர்கள் பணம் வாங்குவதற்கு சில நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. பாடசாலையின் பராமரிப்புக்கு அரசினால் கொடுக்கப்படும் பணம் அறவே போதாது. இதனால் மாணவர்களிடம் இருந்து பெறப்படும் பணத்திலேயே அவர்கள் இதனைச் செய்ய வேண்டியிருக்கின்றது. பணம் வாங்குவது தொடர்பில் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மீது கிடுக்கிப்பிடி பிடித்தால், அதிபர்கள் அதிகாரிகளிடம் பாடசாலை பராமரிப்புக்கு அதிக நிதி கேட்பார்கள். இதனால் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்கவே அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் பணம் வாங்குவது தெரிந்திருந்தும் பேசாமல் விடுகின்றனர். அத்துடன் பெற்றோரும் தமது பிள்ளை குறித்த பாடசாலையில்தான் கற்க வேண்டும் என்று நினைப்பதால், எவ்வளவு பணத்தையும் கொடுக்கின்றனர். இது பணக்கார மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு பொருந்தும். ஏழைப் பெற்றோர் என்ன செய்வது? அவ்வாறு பணம் கொடுக்காமல் அதற்கு எதிராக முறைப்பாடு செய்தால், நடவடிக்கை எடுக்கப்பட்டு மீளவும் அதே பாடசாலையில் பிள்ளை படிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் பழிவாங்கப்படுவான் என்கின்ற பயத்தினால் பலர் முறைப்பாடு செய்வதில்லை.

எனவே அதிபர்கள்தான் இந்த இடத்தில், சட்டத்துக்கு அப்பால் மனிதநேய அடிப்படையில் நடக்க வேண்டியவர்களாகின்றனர். பெற்றோரால் கொடுக்க முடிந்ததைப் பெற்றுக் கொண்டு மாணவர்களை பாடசாலையில் சேர்க்க அனுமதிக்க வேண்டும். இல்லாதவனிடம் கொண்டு வந்து தா என்று கேட்பதில் நியாயமில்லை. இதனால், ஏழைப் பெற்றோர் தமது பிள்ளைக்கு கல்வியே வேண்டாம் என்று கைவிடும் நிலைக்கு வந்து விடக் கூடாது.

எனவே சட்டம் – அதிகாரிகள் இறுக்கம் – என்பவற்றுக்கு அப்பால் அதிபர்களின் மனித நேயமே முக்கியமானது. இல்லாவிட்டால்,நாய்வாலைநிமிர்த்தவே முடியாது.

பத்தி எழுத்து

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | | | | | | | |
| | 3 | 7 | | 5 | 4 | 9 | | 2 |
| 2 | 5 | 4 | 8 | | | | | |
| 8 | 6 | | 5 | | | | | 3 |
| | | | 2 | 6 | 3 | | | |
| 4 | | | | | 9 | | 6 | 1 |
| | | | | | 8 | 2 | 4 | 5 |
| 9 | | 2 | 1 | 3 | | 6 | 7 | |
| | | | | | | | 1 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 1 | 9 | 2 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 9 | 7 | 4 | 3 | 1 | 8 | 6 |
| 4 | 1 | 3 | 5 | 8 | 6 | 7 | 2 | 9 |
| 3 | 4 | 2 | 8 | 6 | 7 | 9 | 5 | 1 |
| 5 | 8 | 7 | 2 | 1 | 9 | 6 | 3 | 4 |
| 1 | 9 | 6 | 3 | 5 | 4 | 2 | 7 | 8 |
| 9 | 2 | 4 | 6 | 3 | 8 | 5 | 1 | 7 |
| 6 | 7 | 1 | 4 | 2 | 5 | 8 | 9 | 3 |
| 8 | 3 | 5 | 9 | 7 | 1 | 4 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்கலை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### சுயநலத்தை அறவே ஒழியுங்கள்.

கர்மயோகம் சுயநலத்தை முதலில் ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறது. அதனைத் தடுப்பதற்கான ஆற்றல் உங்களிடம் இருக்குமானால் அதனை உடனே தடுத்துவிடுங்கள். சுயநலப் பாதைகளில் மனம் செல்ல அதற்கு மேலும் அனுமதிக்காதீர்கள். அதன் பிறகு உலகத்தில் சென்று முடிந்த அளவு வேலை செய்யலாம், விரும்பியபடி வாழலாம், விரும்பிய இடங்களுக்குச் செல்லலாம். உங்களை எந்தத் தீமையும் அணுகாது. தாமரை இலை தண்ணீரில் இருக்கிறது ஆனால் தண்ணீரால் அதனை நனைக்கவோ அதன்மீது ஒட்டிக் கொள்ளவோ முடியாது. அதுபோலவே உலகில் நீங்களும் இருப்பீர்கள். இது தான் வைராக்கியம், ஆசையின்மை, பற்றின்மை என்று அழைக்கப்படுகிறது.

## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 600 | 450 |
| நண்டு | 200 | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 400 | 500 | 450 | 600 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | – |
| சுறா | 450 | 480 | 550 | – | – |
| சீலா | 250 | 250 | 400 | 400 | 350 |
| விளை | 450 | 400 | 450 | 600 | 350 |
| முரல் | 200 | 280 | 350 | 500 | – |
| கும்பிளா | 350 | 380 | 450 | 400 | 270 |
| கிழாக்கன் | 300 | 320 | 400 | – | – |
| ஓரா | 350 | 400 | 300 | – | – |
| திரளி | 150 | 180 | 200 | 300 | – |
| நகரை | 150 | 160 | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 170 | 100 | 200 | 60 |
| ஒட்டி | 250 | 200 | 200 | 400 | 200 |
| திருக்கை | 150 | 130 | 200 | 300 | 130 |
| பாலை | 350 | 300 | 300 | 400 | – |
| வாளை | 120 | 180 | 350 | 600 | 200 |
| கொய் | 100 | 120 | 80 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 200 | 400 | 350 |



# உங்களுக்கு சூத்தை பற்களா?

ஊட்டச்சத்துக் குறைபாடு பற்களில் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தும். அதனால் பற்களில் அதிக அளவில் ஓட்டைகள் ஏற்பட்டு, அவ்விடத்தில் கிருமிகள் குடி புகுந்து பற்களை அழிக்கின்றன. ஆகவே பற்கள் சூத்தை அடையாமல் இருக்க வேண்டுமானால், முதலில் பற்களை வலுவடையச் செய்ய வேண்டும். அதற்கு உண்ணும் உணவுகளில் அதிக கவனத்தை செலுத்த வேண்டும். சாம்பல் பயன்படுத்திப் பற்களை துலக்கினால், சாம்பலானது வாயில் உள்ள டொக்ஸின்களை உறிஞ்சி, பற்களுக்கு நல்ல பாதுகாப்புத் தரும். அதிகம் சாம்பல் கொண்டு பற்களைத் துலக்கினால், பற்கள் வெண்மையாக இருப்பதோடு, பற்களை அழித்துக் கொண்டிருக்கும் கிருமிகளை வெளியேற்றி, பற்களுக்கு வலிமையைத் தரும். அன்றாடம் வேப்பங்குச்சி கொண்டு பற்களை துலக்கினால், அதில் உள்ள கசப்புத்தன்மையினால், வாயில் உள்ள கிருமிகள் அழிந்துவிடுவதோடு, வாயும் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

## நாளை

**தை-13 செவ்வாய்க்கிழமை**

**27.01.2015**

திதி: அட்டமி பி.இ.03.20 வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப.04.37 வரை
சுபநேரம்: 11.06-12.36 வரை
இராகுகாலம்:03.36-05.06 வரை



# ஆபத்துகள் தெரியுமா?

பல்வேறு நிறங்களில் பிளாஸ்டிக் சாப்பாட்டுப்பெட்டிகளில் உணவு கொண்டு செல்ல குழந்தைகள் ஆசைப்படுவார்கள். ஏனெனில் விதவிதமான வடிவங்கள், நிறங்கள் என குழந்தைகளை இந்தப் பிளாஸ்டிக் சாப்பாட்டுப்பெட்டிகள் வசீகரிக்கும். பெற்றோர்களும், தங்கள் பிள்ளைகளின் ஆசைப்படியே நடந்துகொள்வர், சிறியவர்கள் மட்டுமல்ல, இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் அனைவருமே பாடசாலை மற்றும் அலுவலகத்துக்கு இந்த நிறம் கொண்ட பெட்டிகளை கொண்டு செல்கின்றனர். ஆனால், இதன் விபரீதம் தெரியுமா உங்களுக்கு, கடைகளில் குறைந்த விலை பிளாஸ்டிக் பெட்டிகள் நிறைய வந்துவிட்டன. இவை எல்லாம் தரமானது என கூற முடியாது. பொதுவாக, பிளாஸ்டிக்குகளில் இருந்து, பி.பி.ஏ எனப்படும் வேதிப் பொருள் உருவாகும். இது, ஹார்மோன் பாதிப்பை ஏற்படுத் தும். நரம்பு சார்ந்த பிரச்சினைகளை உருவாக்கும். தொடர்ந்து பயன்படுத்துவதால், எடை கூடும், நீரிழிவு நோய் வரலாம். குறைந்த வயதிலேயே, பெண்கள் பூப்பெய்தி விடவும் வாய்ப் புள்ளது. எனவே இவ்வாறான பெட்டிகளை வாங்கும் போது இதுபற்றிய குறிப்புகள் உள்ளனவா எனபார்த்து, தரமானதாக வாங்க வேண்டும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 50 | 40 | 80 |
| கத்தரி | 200 | 160 | 200 | 160 | 200 | 240 |
| கரட் | 180 | 200 | 180 | 200 | 200 | 220 |
| மரவள்ளி | 40 | 60 | 40 | 60 | 50 | 40 |
| பயிற்றை | 160 | 200 | 140 | 180 | 160 | 200 |
| பாகல் | 200 | 200 | 120 | 160 | 160 | 240 |
| கருணைக்கிழங்கு | | 60 | 50 | 80 | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 70 | 80 | 80 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 110 | 100 | 80 | 80 | 120 |
| பூசணி | 70 | 80 | 50 | 70 | 70 | 100 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 220 | 240 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 100 | 80 | 80 |
| கீரை | 15 | 20 | 25 | 20 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 50 | 30 | 40 |
| மிளகாய் | 800 | 800 | 500 | 600 | 550 | 800 |
| புடோல் | 120 | 120 | 100 | 120 | 140 | 140 |
| கோவா | 130 | 160 | 120 | 160 | 100 | 160 |
| வெண்டி | 200 | 160 | 100 | 140 | 140 | 120 |
| போஞ்சி | – | 200 | 200 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 280 | 320 | 240 | 280 | 280 | 400 |
| தேங்காய் | 50 | 50 | 60 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 10 | 20 | 30 | 10 |
| கறிமிளகாய் | 300 | 320 | 280 | 280 | 240 | 200 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 140 | 100 | – |
| பனங்கிழங்கு | 05 | 04 | 05 | 05 | 05 | 05 |

# நம்பிக்கையோடு காத்திருப்போம்!

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ஆட்சி மாற்றம் நிகழ்ந்த உடனேயே அந்த நாட்டின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லி வந்து பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளுக்கும் இடையில் சுமுக உறவு நிலவ வேண்டியதன் அவசியத்தை இந்தச் சந்திப்பு உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் புகார்ப் பட்டியல் மிக நீண்டது. தமிழ்நாட்டில் உள்ள சில தீவிர இலங்கை எதிர்ப்பாளர்களின் தொடர் செயல்பாடுகள், இலங்கையின் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது போன்றவை குறித்த புகார்கள் அவை. போருக்குப் பின், தமிழர்களுக்குச் சுமுகமான அரசியல்தீர்வைக்காணத் தவறியது, காணாமற் போனவர்கள், முகாம்களிலும்சிறைகளிலும் இன்னமும் இருப்பவர்கள், இறந்தவர்கள் குறித்த தகவல்களைத் தமிழர்களுக்குத்தெரிவிக்காமல்மனித உரிமைகளை இலங்கை அரசு மீறுவது போன்றவை குறித்து இந்திய அரசுக்கும் அதன் மீது அதிருப்திகள் இருக்கின்றன.

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் மன்றக் கூட்டத்தில் இதனாலேயே இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு முறை வாக்களித்தது இந்தியா. ஒரு முறை வாக்களிக்கவில்லை. சீனப் போர்க் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்தில் – ஒரே ஆண்டில் இரண்டு மாத கால இடைவெளியில் – அடுத்தடுத்து நிறுத்தப்பட்டதுகுறித்தும் இந்தியாவுக்குக் கடும் அதிருப்தி இருந்தது.

இலங்கையின் சீனச் சார்புத் தோற்றத்தை மாற்ற முயற்சிப்பதாக சமரவீர வெளியிட்ட அறிக்கை இந்தியாவுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

அதே வேளையில், இந்திய ஆதரவு நிலையை இலங்கை அரசு எடுத்தால், இலங்கையின் பெரும்பான்மை மக்களின் அதிருப்திக்கு ஆளாக நேரும் என்பது இக்கட்டான நிலைமை.



இரு நாடுகளுமே புவியியல்ரீதியாகப் பக்கத்து நாடுகளாக இருப்பதையும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த நட்புறவையும் பயன்படுத்தி உறவைச் சீரமைப்பதே இப்போதைக்கு இரு நாடுகளும் உடனடியாகச் செய்யக் கூடியது.

முற்றிலுமாக நம்பிக்கை இழந்து போயிருக்கிறார்கள் இலங்கைத் தமிழர்கள். அரசியல், போராட்டம் என்ற சொற்களெல்லாம் அவர்களிடம் அர்த்தமிழந்துபோயிருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை இனியும் கண்டுகொள்ளாமல் அந்த நாட்டு அரசு இருக்க முடியாது.

போர்க் குற்றங்கள்குறித்து விசாரிக்க வேண்டும், காணாமற்போன, இறந்துபோன தமிழர்கள்குறித்த தகவல்களைத் திரட்டித் தர வேண்டும் என்றதமிழர்களின் கோரிக்கைகளையும் புதிய அரசு உடனடியாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

> இலங்கைத் தமிழர்களின் வாக்குகள் அவருக்குப் பெருமளவில் கிடைத்திருக்கின் றன என்பதால், தங்களுக்கு நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவே இலங்கைத் தமிழர்கள் எண்ணுகிறார்கள்.

இலங்கை ஜனாதிபதி சிறிசேன இந்தியாவுக்கு அடுத்த மாதம்வரும்போது, இந்த விஷயங்கள் குறித்துப் பேச்சு நடத்தப்படும் என்று நம்பலாம். சிறிசேன தற்போதுதான் பதவியேற்றிருக்கிறார்.



இலங்கைத் தமிழர்களின் வாக்குகள் அவருக்குப் பெருமளவில் கிடைத்திருக்கின்றன என்பதால், தங்களுக்கு நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவே இலங்கைத் தமிழர்கள் எண்ணுகிறார்கள்.

நம்பிக்கையோடுசற்றுப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

*(நன்றி: த இந்து)*

# ரிவிஎஸ் புதிய மாதிரிகள் அறிமுகம்




மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றின் விற்பனையில் இலங்கையில் முன்னோடியாக திகழும் ரிவிஎஸ் லங்கா புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டித் தொகுதியை அறிமுகம் செய்துள்ளது.

தனது ஸ்கூட்டர் தெரிவுகளில் புதிய உள்ளம்சமாக ரிவிஎஸ் ஸ்கூட்டி சற்ஸ் (TVS Scooty Zest) ஐ அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ஸ்கூட்டர்கள் பிரிவில் அசைக்க முடியாத முன்னிலையாளராக தெரிவாகியுள்ளது.

ரிவிஎஸ் ஸ்கூட்டி சற்ஸ் 110 என்பது நவீன தோற்றத்தில் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் காணப்படும் வடிவமைப்பு மற்றும் வர்ணங்கள் போன்றன அதிகளவு கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. இதில் 110சிசி இயந்திரம் காணப்படுவதுடன் மணிக்கு 0–66 கிலோமீற்றர் வேகத்தை 11.1 செக்கன்களில் எய்தக்கூடியது. இவற்றில் பக்லைற் ஸ்பீற் மீற்றர், புதிய இலைவடிவிலானபக்கக்கண்ணாடிகள்ஆகியவற்றைகொண்டுள்ளன.

ரிவிஎஸ் லங்கா முச்சக்கர வண்டிகள் பிரிவிலும் முன்னிலையாளராகத்திகழ்கிறது. தற்போது நான்கு மாதிரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

சந்தையில் அண்மையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த ரிவிஎஸ் கிங் எவ்எல்டி அதிகளவு கேள்வியை பெற்றுள்ளது. இதில் மேலதிக 35 உள்ளம்சங்கள் காணப்படுகின்றன.(ந)

# தேசிய வர்த்தக சந்தையில் 4Ever Skin Naturals க்கு விருது வழங்கி கௌரவம்



உற்பத்தித்துறைப்பில் சிறப்பாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமைக்காக 4Ever Skin Naturals நிறுவனம், அண்மையில் கொழும்பு ஹில்டன்ஹோட்டலில்இடம்பெற்ற தேசிய வர்த்தக சிறப்புகள் விருதுகள் வழங்கலின் போது கௌரவிக்கப்பட்டிருந்தது.

4Ever Skin Naturals தயாரிப்புகளின் வெற்றிகரமான செயற்பாடு என்பது ஆசிய மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் சிறப்பாக பிரதிபலிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக அழகியல் துறையில் பல தசாப்த காலமாக கொண்டுள்ள அனுபவம் மற்றும் நவீன உற்பத்தி வசதிகள் போன்றவற்றுடன், சிறந்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் போன்றன உற்பத்தி செயற்பாடுகளை மேம்படுத்த பங்களிப்பு வழங்கி வருகின்றன.

இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் சரும பராமரிப்பு மற்றும் சருமத்தை அழகு படுத்தும் பொருள்களாகவும் முகம், உடல் மற்றும் கூந்தல் போன்றவற்றுக்காகவும் அமைந்துள்ளன.

# செய்திகள்

## தகவலறியும் சட்டவரைவு பெப்.20 இல் நாடாளுமன்றுக்கு

கொழும்பு,ஜன.26
தகவலறியும் சட்டவரைவை எதிர்வரும் பெப்ரவரி 20 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பாக பொது சன ஊடக அமைச்சு மற்றும் நீதியமைச்சின் ஒருங்கிணைவுடன் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாக பொது சன ஊடகத்துறை அமைச்சின் செயலாளரான கரு பரணவிதான தெரிவித்துள்ளார்.
இந்தத் தகவலறியும் சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வதை முன்னிட்டு கடந்த காலம் முழுவதிலுமாக தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து சட்டவரைவுகளுமே விசேடமாக பரிசீலனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அவற்றிலுள்ள வரவேற்பான காரணிகள் உள்ளடக்கப்படும். புதிய சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வதற்கு காத்திரம்காட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.
அவ்விதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருக்கும் சட்டவரைவை சட்டவிதிகளில் முற்போக்கானதொரு சட்டவரைவாக ஆக்கிக் கொள்வதற்கு செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ – 22)

## பிரதமரின் ஆலோசகர்களாக நால்வர் நியமனம்

கொழும்பு, ஜன.26
பிரதமரின் ஆலோசகர்களாக எஸ்.வீ.கே.கே.வேரகொட, சஜித்த ரத்வத்தை, நிரஞ்ஜன் டி சில்வா, தேவாதித்ய மற்றும் மலிக் சமரவிக்கிரம ஆகிய பிரமுகர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இவர்களைவிட சபைத் தலைவரின் செயலாளராக அப்துல் நவுர் ரஹ்மான் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும்ராஜித சேனாரத்னதெரிவித்தார்.(ற–22)

# மஹிந்தவை பாதுகாப்பதாக உறுதி எதுவும் வழங்கவில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜன.26
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாப்பதாக உறுதிகள் எதுவும் அளிக்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதிப்பதிலிருந்து ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாப்பதாக புதிய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன உறுதிகள் எதனையும் அளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

> குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் எவ்வித பாரபட்சமும் இன்றி தண்டிக்கப்படுவர் என்றும் கூறிய அவர், சட்டம் அனைவருக்கும்சமமானதே. ”

அண்மையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றபோது, ராஜபக்ஷ குடும்பத்தைபாதுகாப்பதாகமைத்திரிபால உறுதியளித்தார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.
"இவ்வாறானஎந்தவொருஇணக்கப்பாடும் எட்டப்படவில்லை. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர்"– என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஊழல் மோசடிகளிலோ அல்லது வேறும் குற்றச்செயல்களிலோ ஈடுபட்டவர்கள் எவ்வித பாரபட்சமும் இன்றி தண்டிக்கப்படுவர் என்றும் கூறிய அவர்,சட்டம் அனைவருக்கும்சமமானதே என்றும் குறிப்பிட்டார்.
"கடந்த ஜனாதிபதி அதீத அதிகாரங்களை கொண்டிருந்ததார். குற்றச்செயல்களுக்குத் தண்டனைவிதிக்கமுடியாதநிலைமை காணப்பட்டது. ஜனாதிபதியின் இந்த அதிகாரங்கள் வரையறுக்கப்படும். சாதாரண குடிமகனைப் போன்றே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்"– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# முதலில் நிவாரணம் பின்னர்தான் அதிரடி

### இப்படிக் கூறுகின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜன.26
முதலில் பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்கியதன் பின்னர் முன்னைய அரசின் மோசடிக்காரர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
தெனியாய, பல்லேகம பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.
"அத்தியாவசியப் பொருள்கள் மீதான வரிகளை அதிகரித்து கடந்த அரசு பொதுமக்கள் மீது பொருளாதாரச் சுமையொன்றை ஏற்றியிருந்தது. ஆனால் அது ஒரு பெரிய தவறான பொருளாதார நடைமுறையாகும்.
அதற்குப் பதிலாக கிராமப்புறங்களின் பொருளாதார பலத்தை அதிகரிக்கும் வகையிலான திட்டங்களின் மூலம் வர்த்தக முயற்சிகளை அதிகரிக்கலாம். இதன்போது அரசுக்கான வரி வருமானம் அதிகரிக்கும். மறுபுறத்தில் நாட்டு மக்களுக்கும் நன்மை கிடைக்கும். இதுதான் இன்றைய அரசின் பொருளாதாரக்கொள்கையாக உள்ளது.
தற்போதைய நிலையில் நாட்டு மக்களின்பொருளாதாரம் கடந்த அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக சீரழிந்துள்ளது. அதனை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டும். தற்போதைக்கு எரிபொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.இதுபொதுமக்களுக்குநேரடியான நன்மைகளை ஏற்படுத்தி உள்ளது. எதிர்வரும் நாள்களில் மேலும் பல பொருள்கள் மீதான வரிகள் நீக்கப்பட்டு, விலைகள் குறைக்கப்படும். அதன் மூலம் பொதுமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும்.
அதன் பின்னரே முன்னைய அரசின் மோசடிக்காரர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்"– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.(ற)

# சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் இனி மாற்றம்

### அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26
சமுர்த்திப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளன என்று வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
தங்கல்லையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பொதுமக்களுக்குமிகவும்இலாப நோக்கம் கொண்ட – மிகவும் சாதாரண முறையில் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.
அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் விரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# சிறுபான்மையினருக்கு தீர்வின்றி ஏனைய பிரச்சினைகள் தீரா

### சம உரிமை இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26
தற்போதைய அரசியல் சூழலில் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும்பிரச்சினைகள்தொடர்பில் கவனம் செலுத்தாமல் நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. இது தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. –இவ்வாறு சம உரிமை இயக்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த இயக்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
"நிறைவேற்றுச் சபையை உருவாக்கி பிரதான பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணப்படும்என்று தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் காணப்பட்ட ஊழல், குடும்ப ஆதிக்கம், ஜனநாயக உரிமைகள் மறுப்பு, கட்டுமீறிய விலைவாசி அதிகரிப்பு போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளால் விரக்திக்குள்ளாகியிருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.
நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் விடயத்தில்சட்டநடவடிக்கை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற யோசனை தேசிய நிறைவேற்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் போர்முடிவடைந்து ஐந்து வருடங்களாகிவிட்டன. கைதிகளில் அனேகமானோர் 15 வருடங்களாகச் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். அவர்களை விசாரணையென்ற போர்வையில் காலத்தை கடத்த முனைவது நல்லாட்சிக்கான அடையாளமல்ல. நாடாளுமன்ற உறுப்பினர்களான மகேஸ்வரன், ரவிராஜ், யோசப் பரராஜசிங்கம், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் ஊடகவியலாளர் படுகொலை தொடர்பில் மீள்விசாரணை நடத்தப்பட வேண்டும்.
கடந்த காலங்களில் தமது உரிமைகளுக்காகப் போராடியசிங்கள், தமிழ், முஸ்லிம் பொது மக்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். சிறைசாலைக்குள் வைத்து கொலை செய்யப்பட்ட டில்ருக்ஷன், நிமலரூபன் போன்றோர் உள்ளிட்ட கொலைகளுக்கு விசாரணை வேண்டும்.
வடக்கு, கிழக்கில் இராணுவ அதிகாரத்தை இரத்துச் செய்ய வேண்டும். போர் முடிந்து 5 வருடங்கள் ஆகியும் இராணுவ பிரசன்னம் குறைக்கப்படவில்லை.
மேலதிகமாக உள்ள இராணுவத்தினரை வேறு பணிகளில் அமர்த்துவதன் மூலம் இராணுவத்தின் எண்ணிக்கையையும் பாதுகாப்புச் செலவினத்தையும் குறைக்க முடியும்.
போர் முற்றுப்பெற்ற நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையற்றதொன்று. (ற–4)

# செய்திகள்

## புதையல் தோண்டியோர் கைது

கொழும்பு, ஜன.26
பொல்பிதிகம அம்பகஸ்வெவ பிரதேசத்தில், புதையல் தோண்டிக் கொண்டிருந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள், நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. இதனிடையே, புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட பொருள்கள் தொகுதியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்கள், மஹவ, குளியாபிட்டிய, ரூவன்புர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மாடியிலிருந்து தவறி வீழ்ந்து குழந்தை சாவு


கொழும்பு, ஜன.26
கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள தொடர்மாடிக் கட்டடத்தின் 22 ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்து 4 வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு 7.22 மணியளவில் குழந்தை மாடியிலிருந்து விழுந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். குழந்தை களுபோவில போத்னா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தது.
குழந்தையின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ற)

# பிரதம நீதியரசர் விலகாதுவிடில் சட்ட நடவடிக்கை

### இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு தீர்மானம்

கொழும்பு, ஜன.26
பிரதம நீதியரசர், பதவியில் இருந்து விலகாவிடின், அதற்கு எதிராக முன் எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்துள்ளது.
இது குறித்துக் கருத்து வெளியிட்ட, அந்தச் சங்கத்தின் செயலாளர் அஜித் பத்திரன, பிரதம நீதியரசரை பதவியிலிருந்து விலக்குவது தொடர்பில் பல தீர்மானங்கள் எட்டப்பட்டன என்று குறிப்பிட்டார்.
இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிடம் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் மேற்கொண்ட விசாரணை தொடர்பில் நிறைவேற்று சபையின் போது, கலந்துரையாடப்பட்டது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற)

## நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் பிரதமரின் வசம்



கொழும்பு, ஜன.26
நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடும் அதிகாரங்கள் பிரதமரின் கரங்களுக்குக் கிட்டும் விதத்தில் அரசமைப்பில் மாற்றம் ஒன்றைச் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த யாப்பு விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அனுமதி பெறப்படவுள்ளதாக பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது.
எவ்வாறான போதிலும் இது சம்பந்தமாக இது வரையிலும் அரசின் சிரேஷ்ட தரப்பினர் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை என்றும் கூறப்பட்டது. (ஒ - 22)

## அரச வளப் பயன்பாடு தொடர்பில் நடவடிக்கை

### 'பவ்ரல்' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26
கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச வளங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.
பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## 'சதொச'வில் ஊழலா? விசாரிக்க குழு அமைப்பு

கொழும்பு, ஜன்.26
'சதொச' நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
ஓய்வுபெற்ற நீதிபதிகள், கணக்காய்வாளர்கள் மற்றும் வருமான வரி அதிகாரிகள் ஆகியோர் விசாரணைக் குழுவில் உள்ளடக்கப்படுவார்கள் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா குறிப்பிட்டார்.
நிறுவனத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு, அது தொடர்பான பரிந்துரைகளை இந்தக் குழு அமைச்சரிடம் கையளிக்கவுள்ளது.
இதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.
அத்துடன், உணவுத் திணைக்களம் உள்ளிட்ட மேலும் சில நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ற)

## ஜயநாத் பெரேரா நாடு திரும்பினார்

கொழும்பு, ஜன.26
அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் இருந்து வெளியேறிய இலங்கை இராணுவத்தின் சிங்கப் படைப்பிரிவின் முன்னாள் மேஜர் ஜெனரல் ஜயநாத் பெரேரா நாடு திரும்பியுள்ளார்.
கடந்த காலங்களில் தாம் பல்வேறு பழிவாங்கல்களுக்கு உட்பட்டதாக அவர் கூறியுள்ளார். இந்த நிலையில் அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்ததாகவும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சுமுக நிலை கருதி தாம் நாடு திரும்பியதாகவும் கூறியுள்ளார். (ற)

## வேலை வாய்ப்புப் பணியக மோசடி குறித்து விசாரணை

### அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26
வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில், இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் நிதி கொடுப்பனவு உள்ளிட்ட ஏனைய மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
வெளிநாட்டு வேலைவாய்புத் துறைஅமைச்சர்தலதாஅத்துகோரள இதனைத் தெரிவித்துள்ளார்.
கடந்த வருடத்தில் மாத்திரம், பணியகத்தின் செயற்பாட்டு நடைமுறை செலவு 150 மில்லியன் ரூபா என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக ஆராய்வதற்காக சட்டத்தரணி குழு, கணக்காளர் மற்றும் கணினி தொடர்பான விசேட தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார். (ற)

## வாதும்பர பொலிஸ் பொறுப்பதிகாரி மீண்டும் இணைந்தார் சேவையில்

கொழும்பு, ஜன.26
அரசியல் தலையீடு காரணமாக பதவியை இராஜினாமா செய்திருந்த வாதும்பர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எல்.கீர்த்திசிங்க, நேற்று முன்தினம் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
முன்னாள் பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவின் சம்பவம் தொடர்பில், கடந்த வருடம் டிசெம்பர் 22ஆம் திகதி இவர், தனது பதவியிலிருந்து இராஜினாமாசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



# இந்தியா வந்தார் ஒபாமா

## டெல்லியில் மோடி வரவேற்பு



டெல்லி.ஜன.26
இந்தியாவின் குடியரசு தின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்றுக் காலை 9.45 மணியளவில் இந்தியா வந்தடைந்தார். டெல்லியில் அவரை பிரதமர் நரேந்திர மோடி நேரில் வரவேற்றார்.

டெல்லியில் இன்று நடைபெறும் குடியரசு தின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். இதற்காக அவரும் அவரது மனைவி மிச்சேலும் மேரிலேண்டில் உள்ள ஆண்ட்ரூ விமானப்படை தளத்தில் இருந்து 'எயார்போர்ஸ்வன்'விமானத்தில் நேற்றுமுன்தினம் இந்தியா புறப்பட்டனர். அவர்களுடன்மூத்த அமைச்சர்கள், தொழிலதிபர்கள், பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளிட்ட உயர்நிலைக் குழுவும் புறப்பட்டது.

நேற்றைய தினம் டெல்லி பாலம் விமான நிலையத்துக்கு வந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை, பிரதமர் நரேந்திர மோடி கட்டியணைத்து வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் மாளிகையில் ஜனாதிபதி ஒபாமாவுக்கு அரசு முறைப்படி சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அதிபர் ஒபாமாவும் பிரதமர் நரேந்திர மோடியும் ஹைதராபாத் இல்லத்தில் முக்கிய பேச்சுவார்த்தையை நடத்தினர். இதன்போது பாதுகாப்பு, சர்வதேச தீவிரவாதம், இருதரப்பு வர்த்தகம், அணுசக்தி உடன்பாடு, பருவநிலை மாறுபாடு, ஆப்கானிஸ்தான் அரசியல் நிலைவரம், பாகிஸ்தான் தீவிரவாதிகள் விவகாரம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர். இதேவேளை இன்று காலை டெல்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் ஒபாமா சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். சுமார் 2 மணி நேரம் நீடிக்கும் நிகழ்ச்சிகளை அவர் பார்வையிடுகிறார்.

மாலையில் நடைபெறும் அமெரிக்க, இந்தியாவுக்கான வர்த்தக ரீதியான கூட்டத்தில் ஒபாமாவும் நரேந்திர மோடியும் உரையாற்றவுள்ளனர்.

ஒபாமாவின் வருகையையொட்டி மத்திய டெல்லியில் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது. 71 கட்டடங்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளன. (14)

## பிரிட்டனில் பயங்கரவாத கைதுகள் அதிகரிப்பு

லண்டன்.ஜன.26
பிரிட்டனில் சிரியா தொடர்பான பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களில் கைதானோர் எண்ணிக்கை ஆறு மடங்காக அதிகரித்துள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிரியாவில்பயங்கரவாதப்பயிற்சி முகாம்களில் பங்கேற்றது, பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதியுதவி அளித்தது, பயங்கரவாதச் செயல்களுக்காகத் திட்டமிட்டது போன்ற குற்றங்களுக்காக பிரிட்டன் முழுவதும் 165 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த 2013ஆம் ஆண்டு சிரியா தொடர்பான பயங்கரவாதக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 25பேருடன் ஒப்பிடுகையில், இது 6 மடங்கு அதிகம் எனவும் தெரிவித்துள்ளனர்.(14)

## பணயக் கைதி கொலை வீடியோ; ஆராய்கிறது ஜப்பான்

ரோக்கியோ, ஜன.26
சிரியாவில் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள ஜப்பான் நாட்டைச் சேர்ந்த இருவரில் ஒருவர் கொல்லப்பட்டதாகக் கூறும் வீடியோ காட்சிகளைத் தாம் சரிபார்த்து வருவதாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளாக இருவரை பிடித்து வைத்துள்ளனர். ஹருணா யுகாவா என்ற பணயக் கைதி கொல்லப்பட்டதாக அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் மற்றொரு பணயக் கைதியான கென்ஜி கோடோ இன்னும் உயிருடன் இருப்பதாகவும் அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து ஆராய பிரதமர் ஷின்ஸோ அபே தலைமையில் அமைச்சரவை அவசரமாகக் கூட்டப்பட்டது. தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு ஜப்பான் பணியாது என்று பிரதமர் கூறியுள்ளார். இந்த வீடியோ வெளியிட்டுள்ள கொலைச் சம்பவம் மன்னிக்க முடியாதது என்று தலைமை அமைச்சரவைச் செயலர் யேஷிஹைட் சுகா தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் இருந்து ஒபாமாவுக்கு 'சுத்தக்காற்று'

புதுடெல்லி, ஜன.26
ஒபாமாவுக்காக, அமெரிக்காவில் இருந்து சுத்தமான காற்றை கொண்டுவர அந்த நாட்டு அதிகாரிகள் திட்டமிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவின் வருகையையொட்டி, அமெரிக்க பாதுகாப்பு முகாமையைச் சேர்ந்த அதிகாரிகள் ஏற்கனவே டெல்லி வந்து, அங்குள்ள சூழ்நிலைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அவ்வாறு ஆய்வு செய்த அமெரிக்கா இரகசிய சேவைப் பிரிவின் அதிகாரிகள் சிலருக்கு சுவாசப்பிரச்சினை, இருமல் போன்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், டெல்லியில் காற்று மாசு அதிகம் இருப்பதாக அவர்கள் கருதியதால், ஒபாமாவுக்காக அமெரிக்காவில் இருந்து டெல்லிக்கு சுத்தமான காற்றைக் கொண்டு வர அந்த நாட்டு உயர் அதிகாரிகள் தீர்மானித்தனர்.

அதன்படி, அமெரிக்க போர்க்கப்பல் மூலம் 20 ஆயிரம் கலன் (ஒரு கலன் சுமார் 3 லீற்றர்) சுத்தமான காற்றை மும்பைக்கு கொண்டு வந்து, பின்னர் அதை மிகுந்த பாதுகாப்புடன் அங்கிருந்து டேங்கர்கள் மூலம் டெல்லிக்கு கொண்டுவர தீர்மானித்தனர். டெல்லி ராஜபாதையில் நடைபெறும் குடியரசு தின விழா அணிவகுப்பை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, ஒபாமா உள்ளிட்ட மிகமிக முக்கிய பிரமுகர்கள் திறந்தவெளியில் அமைக்கப்பட்ட கண்ணாடி கூண்டு மேடையில் அமர்ந்தபடி பார்வையிடும்போது, காற்று மாசு காரணமாக ஒபாமாவுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, அமெரிக்காவில் இருந்த கொண்டு வரப்பட்ட சுத்தமான காற்றை அந்த கண்ணாடி கூண்டுக்குள் செலுத்த அமெரிக்க அதிகாரிகள் தீர்மானித்து இருந்தனர்.(14)

## ரொக்கெட் தாக்குதல்

### உக்ரைனில் 15 பேர் உயிரிழப்பு

கீவ்.ஜன.26
உக்ரைனில் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மரியுபோலின் குடியிருப்புப் பகுதியில் அமைந்த சந்தையில் நிகழ்ந்த ரொக்கெட் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர்.

கிரீமியா தீபகற்பத்தை இணைக்கும் மரியுபோல் நகரைக் கைப்பற்ற ரஷ்யா ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் சண்டையிட்டு வருகின்றனர்.

ரஷ்யா ஏற்கனவே இணைத்துக் கொண்ட கிரீமியாவுடன் நிலவழித் தொடர்பை ஏற்படுத்தும் இடமாகவும் மரியுபோல் உள்ளது. இந்த இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் போரில் உக்ரைன் பெரும் இழப்புகளைச் சந்தித்தது.

அதைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்த உக்ரைன் முன்வந்தது. பெலாரஸ் நாட்டின் தலைநகர் மின்ஸ்கில் ரஷ்யா முன்னிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற பேச்சின் முடிவில் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது.

எனினும் இரு தரப்புகளுக்கிடையே போர் ஓயவில்லை என்பதோடு, அதன்பிறகு நிகழ்ந்த போரில் சுமார் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மரியுபோலின் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள சந்தையில் கடந்த சனிக்கிழமை ரொக்கெட் குண்டு வீசப்பட்டதில் 15 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

டொனெட்ஸ்க் விமான நிலையத்திலிருந்து உக்ரைன் இராணுவத்தினர் அனைவரும் வெளியேறி, அந்தப் பகுதி முழுமையாக கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில், பிற பகுதிகளில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

உக்ரைனுடன் இனி அமைதிப் பேச்சு நடத்தப் போவதில்லை என டொனெட்ஸ்க் பகுதியைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களின் முக்கியத் தலைவரான அலெக்சாண்டர் ஸக்கர்சென்கோ தெரிவித்துள்ளார். (14)



## உடல்களுடன் எயார் ஏசியா விமானத்தின் எஞ்சிய பாகம் மீட்பு

ஜகார்த்தா, ஜன. 26
கடந்த டிசெம்பர் மாதம் இந்தோனேஷியாவில் இருந்து புறப்பட்ட எயார் ஏசியா விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில், மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் விமானப் பயணிகளின் உடல்களும், விமானத்தின் முக்கியப் பாகங்களும் கண்டெடுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று விமானத்தின் எஞ்சிய பாகமும் மீட்கப்பட்டது.

இந்தோனேஷியா அருகே ஜாவா கடலில் 162 பயணிகளுடன் விழுந்து நொறுங்கிய எயார் ஏசியா விமானத்தின் நடுப் பகுதியை, கடலுக்கு அடியிலிருந்து மேற்பரப்புக்குக் கொண்டு வரும் பணி கடந்த சனிக்கிழமை தொடங்கியது.

விமானத்தின் முக்கியப் பகுதிக்குள் மீட்புக் குழுவைச் சேர்ந்தவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நுழைந்ததைத் தொடர்ந்து, இந்தப் பணி தொடங்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் முழுவதும் நிலவிய மோசமான வானிலை காரணமாக இந்தப் பணியில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

இதற்கிடையே, விமானத்தின் நடுப் பகுதியை மீட்கும் முயற்சியின்போது, அதிலிருந்து வெளியேறிய மேலும் 4 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன. (14)

# உலகச் செய்திகள்

## கன்னியாஸ்திரிக்கும் பிறந்தது குழந்தை

### இத்தாலியில் பரபரப்பு

ரோம்,ஜன.26

இத்தாலியில் கன்னியாஸ்திரி மடத்தில் தங்கியிருந்த ஒரு பெண், ஆண் குழந்தையை பெற்றெடுத்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


கிழக்கு இத்தாலியின் லி மார்ச்சே பிராந்தியத்தைச் சேர்ந்த மாக்கெரெட்டா நகரில் உள்ள கன்னியாஸ்திரிகள் மடத்தில் தங்கியிருந்த சுமார் 31 வயது மதிக்கத்தக்க பெண் கடுமையான வயிற்று வலியால் துடிதுடித்து, திடீரென மயங்கி விழுந்தார்.

அங்கிருந்த இதர கன்னியாஸ்திரிகள் அளித்த தகவலையடுத்து, விரைந்து வந்த அம்புலன்ஸ் அவரை சான் செவரினோ பகுதியில் உள்ள பார்ட்டோலோமியோ யூஸ்டாசியோ மருத்துவமனைக்கு ஏற்றிக் கொண்டு விரைந்தது.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அந்த கன்னியாஸ்திரி துடிப்பது வயிற்று வலியால் அல்ல கடுமையான பிரசவ வலியால் என்பதை உணர்ந்து கொண்டனர்.

இதனையடுத்து, உடனடியாக பிரசவ விடுதிக்கு கொண்டு செல்லப்பட்ட அந்தப் பெண் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இவ்வளவு காலமாக நான் கர்ப்பமாக இருந்தேன் என்பதே எனக்கு தெரியாது என சமீபத்தில் தாயான அந்தப் பெண் கூறுவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நல்ல ஆரோக்கியத்துடன் துருதுருவென இருக்கும் அந்த ஆண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்துக் கொள்ள அந்த கன்னியாஸ்திரியின் சகோதரிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (14)



பிரேஸிலின் தென்கிழக்குப் பகுதிகளில் 84 ஆண்டுகளின் பின்னர் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் குடிதண்ணீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் லட்சக்கணக்கான மக்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். (14)

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறிச்செயல்

### ஜப்பான் பணயக் கைதி தலை துண்டித்து கொலை

பக்தாத், ஜன.26

ஐ.எஸ் தீவிரவாதிகளால் சிறை பிடிக்கப்பட்ட ஜப்பான் பணயக் கைதிகளில் ஒருவர் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், எதிரி நாட்டின் பணயக்கைதிகளாகப் பிடித்து, தலையைத் துண்டித்து கொல்வதை வாடிக்கையாக வைத்துள்ளனர்.



சிரியாவில் பாதுகாப்பு நிறுவனம் தொடங்குவதற்காக சென்ற ஜப்பானைச் சேர்ந்த யுகாவா என்பவரை கடந்த ஓகஸ்ட் மாதம் சிறைபிடித்த ஐ.எஸ். தீவிரவாதிகள், அவரை மீட்பதற்காகச் சென்ற ஜப்பானைச் சேர்ந்த பத்திரிகையாளர் கென்ஜி கோடோவையும் பணயக் கைதியாகப் பிடித்தனர். கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்குள் ஆயிரத்து 200 கோடி ரூபா பணம் கொடுத்தால் மட்டுமே இருவரையும் விடுவிப்போம் என தீவிரவாதிகள் நிபந்தனை விதித்தனர்.

இதனை ஜப்பான் அரசு ஏற்றுக் கொள்ளாததால் தீவிரவாதிகள் கைதிகளில் ஒருவரான யுகாவாவின் தலையை துண்டித்துள்ளனர்.

மேலும், துண்டிக்கப்பட்ட தலையின் ஒளிப்படத்துடன் மற்றொரு பணயக் கைதியான கோட்டு பேசும் ஒளிப்பதிவு ஒன்றையும் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

ஜோர்டான் நாட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள அல்குவைதா தீவிரவாதி சுஜிதா என்ற பெண்ணை விடுவித்தால் மட்டுமே மற்றொரு பணயக் கைதி விடுவிக்கப்படுவார் என்று தீவிரவாதிகளின் புதிய நிபந்தனை அந்த ஒளிபரப்பில் இடம்பெற்றுள்ளது. (14)

## ஒபாமாவுக்கு டுவிட்டரில் வெடிகுண்டு மிரட்டல்

வொஷிங்ரன்,ஜன.26

இந்தியாவின் குடியரசு தினத்துக்கு செல்வதற்காக அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்சேல் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஆண்டிரிவ்ஸ் எயார் ஸ்பேஸ் விமானத் தளத்திலிருந்து எயார் போர்ஸ் வன் விமானத்தில் புறப்பட்டனர்.



ஏற்கனவே, தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக தாஜ்மஹால் பயணம் திடீரென இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், வட அமெரிக்க விமான பாதுகாப்பு தளபதி, ஒபாமாவுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

டுவிட்டர் மூலமாக இணையத்தளத்தில் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து, உடனடியாக ஒபாமாவின் விமானத்துக்குப் பாதுகாப்பு அளிக்க போர்ட்லாண்டுக்கு 2 விமானங்கள் வரவழைக்கப்பட்டன. அட்லாண்டாவில் ஒபாமா வின் விமானம் பாதுகாப்பாக இறங்கவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)


## 18 ஏக்கர் நிலப்பரப்பில் வொஷிங்டன் வெள்ளை மாளிகை

வொஷிங்ரன், ஜன.26

அமெரிக்காவின் அதிபராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் அதிகாரபூர்வ இல்லமாகவும், அலுவலகமாகவும் 132 அறைகள், 35 குளியல் அறைகளுடன் 18 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட வொஷிங்ரன் வெள்ளை மாளிகை விளங்குகின்றது.

விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதியாக வெள்ளை மாளிகையை சுற்றியுள்ள இடம் அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர வொஷிங்டனில் இருந்து 70 மைல் தொலைவில் உள்ள மேரிலேண்ட் பகுதியில் கேடோக்டின் மலையில் அமைக்கப்பட்டுள்ள 'கேம்ப் டேவிட்' ஓய்வு இல்லத்திலும், 70 ஆயிரம் சதுரடி நிலப்பரப்பில் 20 படுக்கையறைகள், 35 குளியல் அறைகள் உட்பட 119 அறைகள் கொண்ட, வெள்ளை மாளிகையைவிட அளவில் பெரியதான 'ப்ளெய்ர்' இல்லத்திலும் ஒபாமா தங்கிக் கொள்ளலாம்.



தொலைதூர வெளிநாட்டு பயணங்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட 'எயார் போர்ஸ் வன்' விமானத்திலும், குறைந்த தூரம் கொண்ட பயணங்களுக்காக உருவாக்கப்பட்ட 'மெரைன்வன்' ஹெலிகொப்டரிலும் அவர் பயணம் செய்யலாம். இவை இரண்டுமே 70 பேரை ஏற்றிச் செல்லும் வசதி கொண்டவை. ஜனாதிபதிக்கு என 2008 ஆம் ஆண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட போயிங் –747 ரக விமானத்தின் 'காக்பிட்'டில் அமர்ந்திருக்கும்போது, விமானம் ஏறும்போதும் இறங்கும்போதும் எந்த மாற்றமும் உணரப்படுவதில்லை. இந்த வேளைகளில் பயணம் செய்பவர்கள் தடுமாற்றமின்றி நடந்து கூடச் செல்லலாம்.

ஏறும்போது, ஜனாதிபதி உபயோகிக்கும் மேசை எதிர்திசையில் இயங்கி எப்போதுமே சம நிலையில் உள்ளது போல் இருக்கும். அவசர சிகிச்சைக்கு என தயார் நிலையில் மருத்துவ அறையும் விமானத்தினுள் உண்டு.

நாட்டு மக்களிடையே விமானத்தில் இருந்தபடியே பேசுவதற்கு வசதியாக, அனைத்து நவீன தொலைத்தொடர்பு தொழில்நுட்பமும் செய்யப்பட்டுள்ளது. (14)




### கூட்டெண் பலன்கள் 7-9

கேதுவுடன் செவ்வாய் சேர்ந்த ஆதிக்கமாகும். சராசரி உயரமிருப்பர். தேகம் ஒல்லியாக உறுதியுடன் இருக்கும். சாதாரண நெற்றியிருக்கும். மாநிறமிருக்கும். முடி நிறைய இருக்கும்.

தெய்வபக்தி உள்ளவர். அதிகம் பிறரிடம் பழகமாட்டார். இரக்க மனமும் உதவும் குணமும் உண்டு. எப்போதும் மகிழ்வாக இருக்கவிரும்புவார். காதலை விரும்பும் இவர்களுக்குக் காதல் நிறைவேறாது. ஒளிவு மறைவு இல்லாதவர். இதனால் இவரைப் பலரும் பயன்படுத்திக் கொள்ளுவர். நல்ல மனம் இருந்தும் தெய்வ பக்தி இருந்தும் மனவேதனை அதிகமாகும்.

காதலித்தே மணந்தாலும், பெற்றோர் பார்த்துச் செய்த மணமாயினும், வாழ்க்கைத் துணை சரிவராது. சந்தேகம் வாழ்வைக் கெடுக்கும்.

மருத்துவத்துறையில் அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணராவர். தாதியாக இருப்பர். இரசாயனத் தொழிற்சாலை, உலோகம் பயன்படுத்தும் தொழிற்சாலை, அக்னி உலை உள்ள இடத்தில் கணக்கு சம்பந்தமான வேலைகள் பார்ப்பர். கட்டட வேலை, தொழிற்சாலைத் தொழிலாளர்களாக இருப்பர். நடனம், இசை நன்கு வரும். இதில் புகழ் பெறலாம். மனோதத்துவ மருத்துவராக, தத்துவப் பேராசிரியராக இருப்பர்.

வயிற்றுவலி, அல்சர், வயிற்றில் புற்றுநோய் வரலாம். வாதசுரம், இருமல் உண்டாகும். காசநோய், பித்த வாந்தி ஏற்படும்.

### கூட்டெண் பலன்கள் 8-1

இந்த எண் கொண்டவர் சனியுடன் சூரியன் சேர்ந்த ஆதிக்கப் பலன் கொண்டவர். சராசரி உயரமும், சிவத்த உடலும் இருக்கும். சுருட்டை முடி நிறைய இருக்கும். கண்கள் பளிச்சென்று கருமை அழகுடன் இருக்கும். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார்.

துணிவுள்ளவர் வென்றிட வேண்டும் என்ற தாகம் உள்ளவர். சுமாராகவே படிப்பு வரும். ராஜா போல வாழ வேண்டும் என்று நினைப்பவர். நேர்மையான முறையில் எதையும் முடிக்க முயலுவர். இல்லாவிட்டால், எப்படியும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவே நினைப்பர்.

அஞ்சாமல் காதல் திருமணம் செய்வர். சீர்படாமல் மேடு பள்ளமுள்ள வாழ்வில் 28 வயதுக்குப் பிற்பாடு ஒரு தொழிலமைய பொருளாதாரத்தில் உயருவர். கல்வி பல காரணங்களால் தடைப்படும் ஆனால் தம் தொழில் திறமையால் உழைத்து முன்னேறுவார். இயந்திர திருத்துநர், வண்டி வாகன உறுப்புக்கள், மின்சாரக் கருவிகள் வியாபாரம் சிறக்கும். கூலி வேலைகளில் வாழ்வைத் தொடங்குவோரும் பெரிய நிலையை அடைவர். கண் பாதிப்பு ஏற்படும். கோபம் வெப்பம் தரும் குறைபாடுகளும் தாக்கும். மூலம், இதயக் கோளாறு போன்ற நோய்கள் தாக்கலாம். உடலில் ஆங்காங்கே வலிகள் வரும்.

# புகுந்த வீட்டில் பெண்கள்

தற்போதுள்ள கால கட்டத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண்கள் புகுந்த வீட்டின் பாரங்களைத்தான் சுமக்க வேண்டியிருக்குமோ என்று பயப்படுகிறார்கள். ஒரு பெண் வாழப்போகும் புகுந்த வீட்டில் கணவரின் தம்பி, தங்கை இருக்கலாம். அவர்கள் இளம் வயதினராக படித்துக்கொண்டிருக்கலாம். மாமனார், மாமியாரும் அவர்களோடு வசிக்கலாம். படிப்பு, திருமணம், சிகிச்சை போன்ற செலவுகள் நிச்சயமாக அந்தக் குடும்பத்தில் இருக்கும். வேலைக்குப் போகும் அந்த புதுப்பெண், தனது வருமானமும் இனி இந்தக் குடும்பத்தின் மற்ற தேவைகளுக்காக செலவாகுமே என்று யோசிக்கிறார்கள்.



தனது கணவரை மட்டும் நேசித்துவிட்டு, அவரது குடும்பத்தினரை நேசிக்காத பெண்களுக்கு, அந்தக் குடும்பத்தில் இருக்கும் இதர அங்கத்தவர் அனைவரும் சுமைகளாகத்தான் தெரிவார்கள். அப்போது தனது வருமானம் அவர்களுக்காக செலவு செய்யப்படும்போதும்– தனது நேரத்தை அவர்களுக்காக ஒதுக்கப்படும் சூழல் ஏற்படும்போதும், அவர்கள் மீது எரிச்சல் ஏற்படும்.

இந்த எரிச்சல் சூழலில்தான் பல புதுப்பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தச் சூழலில் இருந்துவிடுபட்டு, கணவரை மட்டுமன்றி அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவரையும் நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நேசிக்காவிட்டால், நான் எவ்வளவு செய்தும் உங்களுக்கு திருப்தி இல்லை என்று சொல்லத் தொடங்கிவிடுவீர்கள்.

நீங்கள் உங்களுக்குள்ளே உருவாக்கும் மகிழ்ச்சி அவர்களை அடைந்து அவர்களுக்குள்ளும் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும். நீங்கள் வருத்தப்பட்டுக்கொண்டோ, வேறு வழியில்லை செய்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திலோ ஒருவருக்கு உதவி செய்ய முன்வந்தால், அது முதலில் உங்களுக்குள் கோபம், எரிச்சல் போன்ற மனநிறைவற்ற உணர்வுகளை உருவாக்கும். மனநிறைவோடு செய்யுங்கள். இல்லாவிட்டால் அது, விழலுக்கு இறைத்த நீர்போல் வீணாகிவிடும்.

புகுந்த வீட்டில் பெண்கள் விட்டுக்கொடுத்து போனால் தவறில்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் குடும்பமும், தன்னை சுற்றியிருப்பவர்களும் சந்தோஷமாக இருப்பார்கள்.



# விவாகரத்தில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்!

விவாகரத்து என்ற நிலைக்கு பெண்கள் வந்துவிட்டால் என்னதான் மனதளவில் அவள் தைரியமான பெண்ணாக இருந்தாலும், அவளுடைய சமூக அந்தஸ்து குறைந்து விடும். அதற்கு தக்கபடி அவள் தன் மனதை பக்குவப்படுத்திக்கொள்ளாவிட்டால், மனதளவில் உடைந்து போவாள். அப்போது தனக்கு முன்னால் இருக்கும் உலகம் வேறு, தனக்குப் பின்னால் இயங்கும் உலகம் வேறு என்பதை உணர்வாள். உணர்கிறபோது அவர்களுக்குள் இன்னொரு கேள்வி எழும். அது, நாம் மற்றவர்களுக்கு பாரமாக இருக்கிறோமோ? என்ற கேள்வி! அப்போது விவாகரத்து என்பது தான் எடுத்த தவறான முடிவு என்ற குற்ற உணர்வு தோன்றும். தனது எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கேள்விக் குறியும் தோன்றும். தன் வயதை ஒத்தவர்கள் வாழும் சந்தோஷ வாழ்க்கையும் கண்களை உறுத்தி, கண்ணீர் வரச்செய்யும்.

அப்போது அவர்கள் தங்கள் பலத்தை எல்லாம் இழந்து விடுகிறார்கள். சுற்றி இருப்பவர்களிடம் மூர்க்கத்தனமாக நடந்துகொள்கிறார்கள். அவர்களது வாழ்க்கையில் தேவையற்ற பதற்றமும், கோபமுமே மிஞ்சும். மனதில் பரவியிருக்கும் வெறுமை வார்த்தைகளில் வெறுப்பாக வெளிவரும். அது மற்றவர்களை புண்படுத்தி அவர்களையும் விலகச் செய்யும்.

கணவன்– மனைவி இடையே தகராறு ஏற்பட்டால், அந்த நேரத்தில் பேச்சைக் குறைத்துக்கொள்ள வேண்டும். தேவையற்ற பேச்சு பிரச்சினையை அதிகமாக்கும். அமைதியான தெளிவான சிந்தனையோடு, சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். விவகாரத்துக்கு முன் நிறைய யோசிக்க வேண்டும்.

முக்கியமாக அதற்குப் பின்னால் வாழப்போகும் வாழ்க்கையை பற்றி யோசிக்க வேண்டும். ஏற்கனவே விவாகரத்து ஆகிவிட்டது. இனி நான் என்ன செய்வது? என்று கேட்கும் பெண்களுக்கான ஆலோசனை விவாகரத்தான பெண்கள் முதலில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவேண்டும். குடும்ப உறவுகள் மேம்பாடு அடையும்போது ஓரளவு மகிழ்ச்சி நிரந்தரமாகும். அதன் பின்பு அவர்கள் சமூக உறவை [illegible] படுத்த வேண்டும்.

**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

பிரதான வீதி மானிப்பாய், பதிவு இலக்கமும் திகதியும்: J/1605 21.03.1972

## பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. பதவி: உற்பத்தி நிலைய முகாமையாளர்.**

குறியீட்டு இலக்கம் - 115/13
சம்பள அளவுத்திட்டம் - 9950 - 11700
(66/2006 இன்படி) 85x10 - 90x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட வியாபார பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ்/ க.பொ.த. (சாதாரணதரம்) எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட வியாபார பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**02. பதவி: களஞ்சிய மேற்பார்வையாளர்**

குறியீட்டு இலக்கம் - 207/13
சம்பள அளவுத்திட்டம் - 9950 - 11700
(66/2006 இன்படி) 85x10 - 90x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ்/ க.பொ.த (சாதாரணதர) இல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் சம்பந்தப் பட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**03. பதவி: களஞ்சிய முகாமையாளர்**

குறியீட்டு இலக்கம் - 208/16
சம்பள அளவுத்திட்டம் - 9200 - 10650
(66/2006 இன்படி) 70x10 - 75x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு (2) வருடத்துக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ்/ க.பொ.த (சாதாரணதர) இல் கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி

**04. பதவி: உற்பத்தி தொழிலாளி**

குறியீட்டு இலக்கம் - 318/17
சம்பள அளவுத்திட்டம் - 8950 - 10300
(66/2006 இன்படி) 65x10 - 70x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**05. பதவி: சாரதி**

குறியீட்டு இலக்கம் - 312/15
சம்பள அளவுத்திட்டம் - 9450 - 11000
75x10 - 80x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

5 தரக் கல்விச் சான்றிதழும், கார் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு (1) வருடத்திற்கு குறையாத அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**06. பதவி: அலுவலக உதவியாளர்**

குறியீட்டு இலக்கம் - 317/17
சம்பள அளவுத்திட்டம் - 8950 - 10300
65x10 - 70x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

8 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்

**ஏனைய விவரங்கள்**

(01) விண்ணப்பங்கள் சங்க தலைமைக்காரியலயத்தில் பெற்று **"தலைவர், மானிப்பாய் பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, மானிப்பாய்"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(02) வயதெல்லை 18 - 45 வரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(03) தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினுடாக அனுப்பிவைக்க வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.


(04) நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணையை செலுத்தவேண்டும்.

(05) **விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி: 16.02.2015**


தலைவர்,
மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கம்,
பிரதான வீதி, மானிப்பாய்.

(சி.10066) (46.3.7)


# சிறுவர்




## இது தெரியுமா உங்களுக்கு?




பசுக்கள் இசை கேட்கும்போது அதிகம் பால் சுரக்கின்றன.
தங்க மீன்களால் கண்களை மூட முடியாது.
நத்தைகளால் 3 ஆண்டுகள்கூட தொடர்ந்து தூங்க முடியும்.
பன்றிகள் மேல் நோக்கி வானத்தைப் பார்ப்பதில்லை.
பூனைகள் வாழ்வின் 70 சதவீத நேரத்தைத் தூங்கியே கழிக்கின்றன.
தொடக்கத்தில் ஆண்களுக்காக உருவாக்கப்பட்டவையே 'ஹை ஹீல்ஸ்'.
'டை'யை கண்டுபிடித்தது குரோஷியர்கள்.
இங்கிலாந்தில் உள்ள அன்னப்பறவைகள் அனைத்தும் ராணிக்கே சொந்தம்.
சான்டா கிளாஸ் என்ற கிறிஸ்மஸ் தாத்தாவின் உடை ஆரம்ப காலத்தில் பச்சை நிறத்திலேயே இருந்தது.



## கல் மீன்

உலகிலேயே அதிக விஷம் கொண்டது கல் மீன். கடலிலும் தரையிலும் இது வாழக் கூடியது. பவளத்திட்டுகள், பாறை களுக்கு அருகில் வசிக்கும். தன்னுடைய துடுப்பால் மண்ணைக் கிளறும். அசையாமல் ஒரே இடத்தில் அப்படியே இருக்கும். மீன் என்று தெரியாமல் இரை வந்தால், மிக வேகமாகச் சென்று முள்ளை விரித்து, விஷத்தைச் செலுத்திவிடும். பின்னர் இறந்த இரையை உணவாக்கிக் கொள்ளும். மனிதர்கள் மீது விஷம் பட்டாலும் பிழைப்பது கஷ்டம். பசுபிக், இந்தியப் பெருங்கடல்களில் இந்த மீன் காணப்படுகிறது.




நிந்தியா





வடக்கு மாகாண உழவர் தின விழா வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வடமாகாண சபை அமைச்சர்களான த.குருகுலராஜா, சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தியாகராஜா, தர்மபால, இந்திரராஜா, விவசாய அமைச்சின் செயலர் இ. வரதீஸ்வரன், அரசஅதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

விழாவில் 2014ஆம் ஆண்டின் சிறந்த பண்ணையாளர்களுக்கான விருதுகளும் மாவட்ட அடிப்படையில் வழங்கப்பட்டன. சிறந்த ஆட்டுப்பண்ணையாளர்கள், சிறந்த கோழிப்பண்ணையாளர்கள், சிறந்தவீட்டுத்தோட்டசெய்கையாளர்கள், சிறந்தபாற்பண்ணையாளர்கள், சிறந்த சேதன விவசாய செய்கையாளர்கள் எனப் பண்ணையாளர்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்களிலும் முதலிடம் பெற்றவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. (ற-21)

# 100 நாள்களில் தமிழருக்கும் இடம்

## கேட்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, ஜன.26

தற்போது உள்ள அரசு முன்வைத்திருக்கும் 100 நாள் திட்டத்தில் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை செயற்படுத்துவதன் மூலமாகத்தான் இனி வரும் காலங்களில் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியும் – இவ்வாறு வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண உழவர் திருநாள் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"தை பிறந்தால் வழி பிறக்கும் என்று நம்பி ஏமாந்து போன காலங்களிலே இந்த தை மாதம் எங்களுடைய வாழ்விலே அல்லது விவசாயிகளுடைய வாழ்விலே பெரியொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எங்கள் எல்லோருடைய மனதுகளிலும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதுக்கு முக்கிய காரணம் இந்த நாட்டிலே இருந்த பெரிய கொடுங்கோல் ஆட்சி இம் மாதம் 8ந் திகதி அகற்றப்பட்டுள்ளமையே"– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அந்த மாற்றத்தின் ஊடாக எங்களுக்கொரு நிரந்தரமான சமாதானம் வேண்டும். அதேபோல் எங்களது மாகாணத்தில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட பிரச்சினைகள் அதாவது இராணுவம் பிடித்திருக்கும் நிலங்களை மீட்டெடுப்பது, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது, காணாமல் போனோர் பிரச்சினை போன்றவற்றை தமிழ் மக்கள் சார்பாக நாம் தற்போது பதவியேற்றிருக்கும் புதிய அரசிடம் முன்வைத்துள்ளளோம்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசு போரை மட்டும் வென்றதே தவிர தமிழ் மக்களின் மனங்களை வெல்லவில்லை. அதனால் தான் அவருக்கு இன்று இந்த நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இன்று புதிதாக வந்திருக்கும் இந்த அரசும் தமிழ் மக்களுடைய நம்பிக்கைகளை, மனங்களை வெல்லக்கூடிய அளவுக்கு அவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு எங்களுடைய பிரச்சினைகளுக்கான ஒரு அரசியல் தீர்வை வழங்குவதற்கு இந்த ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாக அமையும். அதற்கு புதிய அரசாங்கம் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். புதிய அரசுடைய இந்த ஆட்சி அதிகாரம் தமிழ் மக்களினுடைய வாக்குகளால் கிடைத்தது. அதனால்தான் இவர்கள் இன்று அந்த ஆட்சி பீடத்தில் இருக்கின்றாரர்கள் எனவே அவர்கள் இப்பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என நம்புகின் றேன்"– என்று தெரிவித்தார். (ற–21)

# யோஷித்த குறித்து ஜே.வி.பி. முறையிடும்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வரான யோஷித்த ராஜபக்ஷ தொடர்பில் இன்று பாதுகாப்பு செயலாளர் பி.எம்.யு.பி. பஸ்நாயக்கவிடம் முறைப்பாடொன்றை முன்வைக்கவுள்ளதாக ஜே.வி.பி யின் மேல் மாகாண சபை உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ திஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தத்தகவலை வெளியிட்டார்.

"யோஷித்த ராஜபக்ஷ எவ்வாறு கடற்படையில் இணைந்து கொண்டார்?. அவர் எவ்வாறு இங்கிலாந்தின் டாக்மத் அரச கடற்படை பல்கலைக் கழகத்தில் புலமைப் பரிசில் பெற்று சென்றார்?. அங்கு பயிற்சி நெறியை நிறைவு செய்து கொள்ள முடியாமல், கடற்படை பெஞ்டொப் பயிற்சியை எவ்வாறு மேற்கொண்டார்? என்பன தொடர்பாக எமது முறைப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (ற)


### மரண அறிவித்தல்

#### திருமதி உமாதேவி முருகேசு

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி முருகேசு நேற்று (25.01.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி செல்லையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், செந்தூரன் (பனை அபிவிருத்திச் சபை), சதீஜா ஆகியோரின் அன்புத் தாயும், கோகுலவாசனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் பரமேஸ்வரி, இராசேஸ்வரி, கணேசலிங்கம், மகாலிங்கம், கோபாலகிருஷ்ணன், கோகுலபாலன், தேவபாலன், இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2015) திங்கட்கிழமை பி.ப. 4.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை தெற்கு, சாவகச்சேரி
077 2173666

தகவல்:
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

#### திருமதி கண்ணகை கணபதிப்பிள்ளை

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகை கணபதிப்பிள்ளை நேற்று (25.01.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவகாமி மற்றும் சின்னப்பிள்ளை, வேலுப்பிள்ளை, வள்ளியம்மைப்பிள்ளை (ஆசிரியை, புற்றளை மகா வித்தியாளயம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் சின்னக்குட்டி, தங்கேஸ்வரி, கார்த்திகேசு ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.01.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி இயற்றாலை ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை,
வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



தைப்பொங்கல்
வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
• இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி:
10.30, 2.30, 6.30, 9.30



**B⁺ சிறுநீரகம் தேவை**

36 வயதுடைய ஆண்
ஒருவருக்கு B⁺ குருதி
வகையைச் சேர்ந்த சிறுநீரகம்
உடனடியாகத் தேவை.
வயதெல்லை 20-50
இற்குள் விரும்பத்தக்கது.
தகுந்த சன்மானம்
வழங்கப்படும்.
தொடர்பு: 077 490 4339,
077 373 2891
(56118) (4.3)



**தேவை**

கணினியில் தமிழ், ஆங்கிலம்
Type Setting/Photoshop
நன்கு செய்யத் தெரிந்தவர்கள் தேவை.
610/3, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 0370, 077 798 9464
(56128) (4.3)



**மருந்தாளர் சான்றிதழ்**
**External Pharmacy Certificate**

Retailsale & Whole Sale
Pharmacy பதிவுக்கான
விண்ணப்ப Pharmacist
Certificate உண்டு.
தொடர்பு: T.P.076 833 0398
(45.3)


# தொழில்நுட்பம்

## உடல் நலத்தை பாதிக்கும் இலத்திரனியல் புத்தகங்கள்



தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக சாதாரண புத்தகங்களுக்கு பதிலாக Edbook எனப்படும் இலத்திரனியல் புத்தகங்கள் அறிமுகமாகியுள்ளன. பல வழிகளில் நன்மைகளைத் தரும் இந்த Edbook வாசிப்பு உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என அமெரிக்க வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதாவது Harvard Medical School ஐச் சேர்ந்த வைத்தியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் சாதாரண புத்தகங்களை வாசிப்பதை விடவும் வெளிச்சத்தினை வெளியிடக்கூடிய இலத்திரனியல் புத்தகங்களை தூங்கும் முன்பு வாசிப்பதால் தூக்கமும், உடல் ஆரோக்கியமும் கெடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதென கண்டறிந்துள்ளனர்.

மேலும் மனித உடல் ஒரு சந்தத்திற்கு ஏற்ப தொழிற்படுவதாகவும், ஆனால் ஸ்மார்ட் கைப்பேசி, டேப்லட் மற்றும் ஏனைய தொழில்நுட்ப உபகரணங்களிலில் இருந்து வெளியேறும் நீல நிற அலை இந்தச் சந்தத்தினை குழப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்பிள் நிறுவனத்தின் அதிரடி



இதுவரை காலமும் அப்பிள் நிறுவனம் Mac இயங்குதளத்தைக் கொண்ட கணனிகளுக்கு அப்டேட்களை பயனர்களின் ஒப்புதலின் பின்னரே நிறுவக்கூடிய வசதியினை வழங்கி வந்தது. ஆனால் முதன் முறையாக கணனியின் பாதுகாப்புடன் தொடர்புடைய அப்டேட்களை தானியங்கி முறையில் நிறுவக்கூடிய வசதியினை உலகெங்கிலும் உள்ள அப்பிள் கணனி பாவனையாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இதேவேளை கணனி இயங்குதளத்தில் காணப்படும் தவறுகள் நீக்கி பதிப்புக்களையும் இவ்வாறு தானியங்கி முறையில் நிறுவக்கூடிய வசதியினை அந் நிறுவனம் வழங்கியுள்ளது. எவ்வித குறைபாடுகளையும் கொண்டிராத இந்தப் புதிய அப்டேட்களை நிறுவும்போது கணனியை மீண்டும் இயக்க வேண்டி (Re-start) அவசியமும் இருக்காது என அப்பிள் நிறுவனத்தின் பேச்சாளர் Bill Evans ரொய்ட்டர் தெரிவித்துள்ளார்.

## வாட்ஸ் அப்-இல் வாய்ஸ் கோல் வசதி




மெசேஜ்கள் பறிமாறிக்கொள்ள பயன்படும் ஒரு முன்னணி அப்ளிகேஷன் வாட்ஸ் அப். இதைப்போன்ற சேவையை வழங்கும் kakao talk, viber அப்ளிகேஷன்களை விட whatsapp செயலிதான் அதிக வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. ஏறத்தாழ மாதந்தோறும் 46 கோடி மக்கள் இதனைப் பயன்டுத்தி வருகின்றனர். வாட்ஸ் அப் செயலியின் அதிவேக வளர்ச்சியால் பேஸ்புக் அந்நிறுவனத்தை வாங்கி தன்னுடன் இணைத்துக்கொண்டது. இதில் கூடுதலாக வாய்ஸ் கோலிங் வசதியும் கொடுக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளிவந்தது.

வாய்ஸ் கோல் செய்ய இணைய இணைப்பு மட்டும் இருந்தாலே போதுமானது. ஒரு போனிலிருந்து மற்றொரு போனுக்கு பேசலாம். இதற்கு போன் பில் எதுவும் கட்ட வேண்டியதில்லை. வழக்கமாக இணையப்பயன்பாட்டுக்கு ஆகும் கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டியிருக்கும். டெக்ஸ்ட் மெசேஜ்களை இலவசமாக பறிமாறிக்கொள்வதைப் போல, இனி இந்த வாட்ஸ் அப் செயலிமூலம் குரல் அழைப்புகளை ஏற்படுத்தி, உங்கள் நண்பர்களுடன் பேச முடியும். இந்த வசதி எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து கொண்டு வரப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


**பணிப்பெண் தேவை**

ஒரு குழந்தை உள்ள சிறிய
குடும்பத்திற்கு உடல் ஆரோக்கியமான
பணிப்பெண் உடன் தேவை. சம்பளம்
போன்றன பேசித்தீர்த்துக்கொள்ளமுடியும்.
தொடர்பு: 077 446 8369
(56137) (4.3)



பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் மற்றும் தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான ஓர் அரிய வாய்ப்பு!!!

நாள் ஒன்றிற்கு ரூபா 200 ஊக்குவிப்புடன் கூடிய ஆறு மாத கால இலவச தொழிற்பயிற்சி

கைத்தறிநெசவுப் பயிற்சி, மரவேலைப் பயிற்சி, மட்பாண்ட பயிற்சி, தும்பினாலான உற்பத்திப் பொருட்களின் பயிற்சிகளும் எதிர்காலத்திற்கான தொழில் வாய்ப்பும்.

வடமாகாணத்திலுள்ள தொழிலாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படையில் இளைஞர் யுவதிகளிற்கான தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியூடாக உள்ளூர் வளங்களை பயன்படுத்தி ஈடுபடக்கூடிய தொழில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களம் வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியை தொடர்ந்து வழங்கிவருகின்றது. இவ்வருடமும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள் :**

- ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம் (மரவேலைப் பயிற்சி ஆண்கள் மட்டும் )
- வயதெல்லை 18 – 35 வருடங்கள். (14–18 வயதிற்குரியவர்கள் கிராம அலுவலரின் சிபாரிசுடன் விண்ணப்பிக்கலாம்)
- கல்வித் தகைமை – 8ஆம் வகுப்புக் கல்வி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
- தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்

கற்கை நெறியின் பின்னர் தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நெறி எதிர்வரும் பங்குனி மாதம் 02ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதால் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களது பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரத்தினை மாசி மாதம் 16ஆம் திகதிக்கு முன்பாக பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள தொழிற்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : விண்ணப்பதாரர் பயிற்சி நெறியின் பெயரை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

தொடர்புகளுக்கு — தொலைபேசி இல :0213202413 -தலைமை அலுவலகம்
1.பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம்.
:0213217577 -கிளிநொச்சி மாவட்ட அலுவலகம்
:0212223546 -யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம்
:0232222418 -மன்னார் மாவட்ட அலுவலகம்
:0213217576 -முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம்
:0242223083 -வவுனியா மாவட்ட அலுவலகம்
2.அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறைத் திணைக்களம், பிரதேச செயலகம்
(சி/18087)(4.3.7)



**மருந்தாளர் வகுப்புக்கள்**
**Pharmacy Classes**

மீட்டல் மற்றும் புதிய வகுப்புக்கள்
ஆரம்பம் 03.02.2015
காலம் 11.00 am to1.00 pm
தொடர்புகளுக்கு: 076 833 0398, 076 668 8287
Institute of family medicine
No.125, main street, Jaffna.
(56148) (4.3)



**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள்புரிபவரே! என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறித்துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஆமென்
(56136) (45.3.7) அடியாள்



**மானிப்பாய் நகர மத்தியில் காணி விற்பனைக்கு**

சோதி வேம்படி பாடசாலை ஒழுங்கையில்
24 பரப்பு

சர்வதேச பாடசாலை, விருந்தினர் விடுதி, வீட்டுத்திட்டம் களஞ்சியசாலை என்பவற்றுக்கு உகந்தது.

- பழைய வீடு, சுற்றுமதில், கிணறு உண்டு.
- யாழ்.வீதி, நகர மத்தி நடைதூரத்தில்
- சாய் பாடசாலை, பிட்மன்ஸ் டியூசன் சென்ரருக்கு அருகில்
- பிரபல பாடசாலைகள், வங்கிகள், மருதடி விநாயகர் ஆலயம், தேவாலயம் மற்றும் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை என்பன அண்மையில்

விலைகள் கோரப்படுகின்றன. (சி/19943) (4.3)

SJMS ASSOCIATES
No.2, Castle Lane, Colombo-04,
Inquiries Call: Newton or Kumar
Te: 011 5444420/21, EXT:417 OR 407

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஜன.26
சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினர் கரப்பந்தாட்டப் போட்டியை மின்னொளியில் நடத்தவுள்ளனர்.
போட்டிகளில் பங்குபற்றவுள்ள அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கழகத் தலைவர் க.தர்ஜன் அறிவித்துள்ளார். (வ-9)

## மெய்வன்மைப் போட்டி

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோசலை குலபாலசிங்கமும் கலந்துகொள்வர். (வ)

# திடீர் சோதனையில் சிக்கின பாவனைக்குதவாத பொருள்கள்

மட்டக்களப்பு, ஜன, 26
மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப்பகுதியினரால்திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.



வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் மற்றும் பாவனைக்கு உதவாத பெருமளவு பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு வெட்டுக்காடு பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் இந்த சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
மட்டக்களப்பு நகரில் சுகாதாரத்துக்குக் கேடான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுச்சுகாதார பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
உணவு விடுதிகள் மற்றும் வர்த்தக நிலையங்களை திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தினோம். இதன்போது சுகாதாரத்துக்குத் தீங்கான முறையில் வைக்கப்பட்டிருந்த பெருமளவு பொருள்கள் மீட்கப்பட்டதுடன் பாவனைக்குதவாத பொருள்களும் மீட்கப்பட்டன. இவ்வாறான பொருள்களை விற்பனை நோக்கத்திற்காக வைத்திருந்த குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. அத்துடன் கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளன. பலதடவைகள் வர்த்தகர்கள் அழைக்கப்பட்டு உணவு பாதுகாப்பு தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளநிலையிலும்கூட அவற்றைக் கவனத்தில் கொள்வதில்லை. பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும்' என்று தெரிவித்தார். (வ-10)

## சமாதான நீதிவானாக நியமனம்

மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த சின்னப்புநாயகம் டிலான் அகிலா இலங்கை சமாதான நீதிவானாக மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
மன்னார் மூர் வீதியை வதிவிடமாகக் கொண்ட அவர் கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும், சாதாரண தரத்தை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும், உயர்தரத்தை மன்–அல்–அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலையிலும் கல்வி கற்று வந்தார்.
சூரியன் எப்.எம். வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளராகவும்,உதவி நிகழ்ச்சி முகாமையாளராகவும் மன்னாரின் கல்விக்குரல் அமைப்பின் இயக்குநராகவும் இவர் கடமையாற்றி வருகின்றார். (வ-56)

## வீட்டுக்குள் அத்துமீறி தாக்குதல்

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்கியவரை வீட்டுக்காரரும் பதிலுக்கு தாக்கியதில் இருவரும் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு சங்கத்தானை சாரதா வீதியில் இடம்பெற்றது.
சம்பவத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி பாஸ்கரன் (வயது -58) கெற்பேலியைச் சேர்ந்த குமாரையா விஜயகுமார் (வயது -37) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவார்.
சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

# நெடுங்கேணி மாணவர்கள் 550 பேருக்கு உபகரணங்கள்

### லண்டன் வாழ் தமிழர் வழங்கிய நிதியில்

வவுனியா, ஜன.26
வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தில் மிகவும் வறுமைநிலைக்கு உட்பட்டுள்ள பாடசாலை செல்லும் 550 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



ஒலுமடு அ.த.க.பாடசாலை, சேனைப்புலவு உமையாள் வித்தியாலயம் ஆகிய 2 பாடசாலைகளினதும் கல்விச் சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கற்றல் உபகரணங்களை வழங்கினார்.
புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் தாயக உறவான யோகானந்தம் (ஜெயா) கற்றல் உபகரணங்களுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தார்.
குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் விமலேந்திரன், அரவிந்தன் ஆகியோரின் தலைமையில் நடை பெற்ற நிகழ்வுகளிலும் வடமாகாணசபை உறுப்பினர்கள், எம்.தியாகராசா, இ.இந்திரராசா, வவுனியா வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் பூபாலசிங்கம், மகாலிங்கம், செந்தூரன், வவுனியா சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கத்தின் வெளிக்கள அலுவலர் ஜெயந்தன், வவுனியா வர்த்தகர் செல்வ உதயன், நாடாளுமன்ற உறுப்பினரின் வெளிக்கள அலுவலர் பரமேஸ்வரன் ஆகியோரும், குறித்த பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் பிரதிநிதிகள், மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறியதாவது:
"நெடுங்கேணி பிரதேசம் போர்க் காலத்தில் முழுமையான அழிவுகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்த பிரதேசம். எனவே இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தாய் தந்தை உறவினர்களை இழந்துள்ளனர்.
இம்மாணவர்கள் தமது எதிர்கால வாழ்க்கையை ஒழுங்கமைத்துக்கொள்ள அவர்களுக்கு கல்வி ஒன்றே சிறந்த தெரிவாகும். இந்தத் தெரிவை பிரகாசமாக்குவதற்காக லண்டனைச்சேர்ந்த ஜெயா கற்றல் நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு நிதியுதவி வழங்கியுள்ளார். அவரது இந்த உயரிய நோக்கத்துக்காக கல்விச்சமூகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.
அதேவேளை ஒவ்வொரு ஆண்டும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாகவும், புலம் பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதிப்பங்களிப்பு ஊடாகவும் கல்வித்துறைக்கே அதிகளவான நிதியை ஒதுக்கி வந்துள்ளமையையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இதிலிருந்து கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் விளங்கிக் கொண்டு கற்றல் செயற்பாடுகளில் கூடியளவு கவனம் செலுத்தி சிறந்த அடைவுகளை காண வேண்டும்"-என்றார். (வ)



கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலையின் அதிபர்
இ. கணேசானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் பெரியதம்பி இராசேந்திரன்
அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து மிகவும் துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம் (19080) (45.3.7)
யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்

அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்
மலர்வு 07 02 1950
உதிர்வு 12 01 2015



அமரர். இராஜநாயகி செல்லத்துரை
எங்கள் குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி வழியாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 27.01.2015 செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் காலை நடைபெறும் அத்துடன் அன்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், நினைவஞ்சலி நிகழ்வும் மு.ப. 11.00 மணிதொடக்கம் Colombo Tamil Sangam (Sangarapillai Hall) No. 7,57th Lane Wellawatte (off Rudra Mawatha) இல் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் தாங்கள் குடும்பத்தோடு கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தகவல் - குடும்பத்தினர்.
No. 557, 5/3 Havelock Road, Pamankada.
Tel: 2367499 | 0774939442

# செய்திகள்

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.26

அல்வாய் கிழக்கு அருள்மிகு குமுழடி அதிசய விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. பத்தாம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை ஆலய கும்பாபிஷேக தினமாகும். அன்றைய தினம் 1008 சங்காபிஷேகமும் நடைபெறும். (வ-78)

## மரண அறிவித்தல்



### வீரகத்தி சந்திரபாலன்

புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சந்திரபாலன் 24.01.2015 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி, தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2015) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புங்குடுதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு
077 056 2132

(56148) (4.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சோதிநாதன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோதிநாதன் 24.01.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டிப்பிள்ளை தம்பையா அவர்களின் புதல்வியும், சோதிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், பவானி, சாந்தினி, சபேஷன் ஆகியோரின் அன்புத் தாயும், வரதன், சண்முகராஜா, சிவானுயா ஆகியோரின் அன்பு மாமியும், நவரட்ணம், பொன்னம்பலம், கமலேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேஸ்வரி, திரவியமலர், சாரதாதேவி, கமலாதேவி, வசந்தாதேவி, காலஞ்சென்ற விசாகபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.பாலசுப்பிரமணியம் (சகோதரன்)

(56145) (45.3.7)

## சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

சாவகச்சேரி, ஜன.26

சாவகச்சேரி நகரசபையின் 2014 ஆண்டுக்கான உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும்.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பாவனையாளர் அலுவலக மின் அத்தியட்சகர் எஸ்.எஸ். ரமணிதரன், செலான் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நிகழ்வில் பொன்விழா ஆண்டு உள்ளூராட்சி வார சிறப்பிதழ் 2014 வெளியீடும் இடம்பெறும். வெளியீட்டுரையை நகரசபை செயலாளர் கா.சண்முகநாதன் நிகழ்த்துவார்.

உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாதம் ஆகியவற்றை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய முன்பள்ளிகள், பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் மற்றும் சிறந்த வணிக நிலையங்கள், சனசமூக நிலையங்கள், போன்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படும். (வ-9)

## முழு நிலா கலை நிகழ்வுகள்

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சி கல்வி வலயத்தின் முழு நிலா கலைநிகழ்வுகள் உட்பட்ட வேறு பல அம்சங்களுடனான அபராஜிதன் எழுதிய 'தென்னவன் நூல்' வெளியீடு இன்று திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மகளிர் விவகார அபிவிருத்தி பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் ஓய்வு நிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளருமாகிய ப.அரியரத்தினமும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஷ்ணனும், மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் க.தர்மராஜாவும், ஏற்புரையை சரசாலை சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் க.அபராஜிதனும் நிகழ்த்துவர். (வ-9)

## பொதுக் கூட்டங்கள்

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

கூட்டத்தில் இந்த வருடத்துக்கான (2015) உத்தேச வரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிப்பு பால் உற்பத்தி தொழிற்சாலையின் எதிர்காலத் திட்டம் ஆகியவை ஆராயப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த நேரத்துக்கு முன்னர் சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் மு.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-9)

◆ ◆ ◆

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## ஆசிரியருக்கு அபராதம்


தென்மராட்சி, ஜன.26

ரயில் வருவதற்கான சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டு கடவை போடப்பட்ட பின்னர் வாகனத்துடன் கடவையைக் கடந்த ஆசிரியருக்கு 3 ஆயிரம் ரூபா அரச நிதியாக செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் திங்கட்கிழமை உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஆசிரியர் குற்றத்தை ஒப்புக் கொண்டபோது "வழி காட்டியாகத் திகழ வேண்டிய நீங்களே சட்டத்தை மீறியது தவறு" என்று எச்சரிக்கை செய்து 3ஆயிரம் ரூபாவை அரச நிதியாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (வ-9)

CMK

## மரண அறிவித்தல்



### கனகசபை உருத்திரகுமாரன்

அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P), முதுகலைமாணி (M.A) முன்னாள் ஆசிரியர் - நயினாதீவு மகா வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர்- கொக்குவில் இந்துக்கல்லூரி, முன்னாள் ஆசிரியர்- உரும்பிராய் இந்துக்கல்லூரி, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் - தீவக வலயம், முன்னாள் அறங்காவலர்- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், இந்நாள் ஆசிரியர், யாழ்/பெரியபுலம் மகா வித்தியாலயம், தர்மகர்த்தாசபை உறுப்பினர்-அமுதசுரபி அன்னதான சபை நயினாதீவு.

நயினாதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை-உருத்திரகுமாரன் (22.01.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை- சரஸ்வதி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், சட்டத்தரணி, டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுபோதினியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர் (பிரான்ஸ்), அபிராமி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்ஜீவனின் (அமெரிக்கா) அன்பு மாமாவும், தியாகராசன் (லண்டன்), செம்மனச் செல்வி (ஆசிரியை- யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சிவனேசன் (சுவிஸ்), ஜீவமணி (டென்மார்க்), அலெக்ஸ்சான்டர்பிளமின் (அப்பன்-ஜேர்மனி), சுரேந்திரன் (குஞ்சு - லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், உமாகரன், கலாதரன் ஆகியோரின் சகலனும், ரஞ்சினி, சத்தியா, மாலினி, சுஜாத்தா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2015) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜோதிவாசா,"
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தொ.பே: 077 218 6665
021 790 0157

தகவல்:
குடும்பத்தினர்.

(56140)(4.7.3)

# குருநகரில் சித்த மருத்துவ பிரிவின் நடமாடும் சேவை

குருநகர், ஜன.26

யாழ். மாநகர சித்த மருத்துவப் பகுதி வெள்ளிக்கிழமை குருநகரில் நடமாடும் மருத்துவ சேவை ஒன்றை நடத்தியது. இச்சேவை குருநகர் தொடர்மாடி முன் பள்ளிப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நடைபெற்றது. இம் மருத்துவ முகாமை குருநகர்ப் பகுதி சித்த மருத்துவப் பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் திருமதி ஹேமா கிருபாகரன், பாஷையூர் பகுதி சித்த மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் வைத்தியர் திருமதி சு.அருள்மொழி ஆகியோர் நடத்தினார்கள்.

இந்த மருத்துவ சேவையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முதியோர் சிறுவர்கள் உட்பட 56 பேர் வருகை தந்திருந்தார்கள் எனவும் இவர்களில் பெரும்பாலானோர் குருநகர் தொடர்மாடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

வாதம், சளி, இரத்த அழுத்தம் ஆகியவற்றால் நோயாளர்களே இவர்கள் எனவும் சிறு வர்களுக்கு பரிசோதனையின் பின்னர் கிரந்தி எண்ணெய் வழங்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகர சித்த மருத்துவப் பகுதியால் மாதத்தின் மூன்றாம் வெள்ளிக் கிழமைகளில் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்படும் எனவும் இதில் நோயாளர்கள் பங்கு கொண்டு தமது நோய்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ். மாநகர சித்த மருத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ – 51)

## மரண அறிவித்தல்கள்



திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி)

### வேலாயுதம்பிள்ளை

வட்டு-வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி) வேலாயுதம்பிள்ளை 24.01. 2015 சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுக்கோட்டை வடக்கு,
டச்சு வீதி, சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

### பெரியதம்பி இராசேந்திரன்

(ஓய்வுபெற்ற தந்திப் போக்குவரத்து உதவியாளர்)



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி இராசேந்திரன் நேற்று (23.01.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், சாவித்திரிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணேஸ்வரி, துரைராசா, புவிலட்சுமி மற்றும் மகாராணி ஆகியோரின் சகோதரனும், கலாவதி (கனடா), கணேசானந்தன் (அதிபர், யா/தொல்புரம் விக்கி னேஸ்வரா வித்தியாலயம்), வித்தியானந்தன் (கனடா), சதானந்தன் (ஜனசக்தி இன்சூரன்ஸ்), கலைமதி, கலைநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் (கனடா), உமாபதிசிவம், கிருபாக ரன், தம யந்தி (ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி), மனோரதி (கனடா), செல்வரஞ்சனி (ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2015) திங்கட் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனத்துக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.
077 6284043, 077 146 1447

தகவல்:
பிள்ளைகள்
(கணேசானந்தன், சதானந்தன்)

(56150)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
11 . 09 . 1945



இறைவன் அடியில்
24 . 01 . 2015

### திருமதி சின்னத்தங்கச்சி தியாகராஜா (பூமாதேவி)

சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி - தியாகராஜா கடந்த (2015.01.24) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.


அன்னார் இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் தியாகராஜாவின் (பத்திரிகை விற்பனையாளர்- சித்தன்கேணி, ஓய்வுபெற்ற உத்தியோகத் தர் - இ.போ.ச.) அன்பு மனைவியும் சுசிலாதேவி, கனடா), ரவீந்தினி (திருகோணமலை), லலிதா (ஜேர்மனி), விமலா (லண்டன்), சுமதி (ஜேர்மனி), ஜெயரூபி (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புத் தாயும், சந்திரசூரியர், பத்மநாதன், தயாநிதி, சிவனருள், சுஜீவாகரன், கஜதீபன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நாகராசா, தியாகராசா (சிறீ - பிரான்ஸ்), இராசகுமார் (அப்பப்பு - கனடா), தனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினவல்லி, ஜெயராஜா (கனடா), காலஞ் சென்ற சிவகுலராசா மற்றும் மகேந்திரராஜா, சுந்தர்ராஜா, சிவராஜா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2015).செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 021 225 0028
சித்தன்கேணி

தகவல்:
கணவர் - சுப்பிரமணியம் தியாகராஜா (சித்தன்கேணி)

## மரண அறிவித்தல்



# செல்லப்பா இரத்தினசிங்கம்

## (சிங்கம் - Artist)

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும், 20/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட செல்லப்பா இரத்தின சிங்கம் கடந்த 23.01.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- மாணிக்கம் (பட்டம்மா) தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரதேவியின் அன்புக்கணவ ரும், ஜெய்ந்திரன், ஜெயந்தி, விஜயசாமுண்டேஸ்வரி (சுமதி), சுரேந்திரன், மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சைலஜா, சிவசுப்பிரமணியம், நாகேந்திரன், தவரஞ்சினி(கேமலதா), தவசீலன் ஆகியோரின் அன்பு மாமனும்; முஸ்குந், பூமிகா, நிருஷன், சதீஸன், தமிழினி, கிருஷிகன், சாத்விகா, தனனியா, ஆதித்யா, ஹம்சனா, விஷ்ணுயா, கிருஷாந் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, அமிர்தலிங்கம், மற்றும் நவரத்தினம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் பஞ்சலிங்கம், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.1.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு: 23.04.1936 இறப்பு: 23.01.2015

20/1, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

(56151)

தகவல்:
குடும்பத்தினர்.

# செய்திகள்

## பொலிஸாரை தாக்கியவர் கைது

வரக்காபொலயில் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸாரை தாக்கியதாக கூறப்படும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகபேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

புத்தளிக்கு ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, 119 எனும் பொலிஸ் அவசர இலக்கத்துக்கு வந்த அழைப்பையடுத்து, குறித்த இரண்டு பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போதே, அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலை மேற்கொண்டவர் போதையில் இருந்ததாகவும் தாக்குதலுக்கு வெட்டுக்கத்தியை பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ந)

## பொலிஸ் அதிகாரிகள் 6 பேருக்கு இடமாற்றம்

இலங்கையின் பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உள்துறை அமைச்சின் செயலாளர் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதன்படி மேல்மாகாண சிரேஷ்ட உதவி பொலிஸ் அதிபர் அநுர சேனாநாயக்க கொழும்பு தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். வடமாகாண சிரேஷ்ட உதவி பொலிஸ் அதிபர் பூஜித் ஜெயசுந்தர மேல் மாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட உதவி பொலிஸ் அதிபர் லலித் ஜெயசிங்க வடமாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண உதவி பொலிஸ் அதிபர் நந்தன முனசிங்க ஊவாவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தென்மாகாண உதவி பொலிஸ் அதிபர் சி.டி. விக்கிரமரத்ன சப்ரகமுவவுக்கு மாற்றம் பெற்றுள்ளார். இதேவேளை யாழ்ப்பாணத்தின் உதவி பொலிஸ் அதிபர் ரவி வித்தியாலங்கார பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார். (ந)

## திருத்தம்

ஜனாதிபதியின் செயலாளருடனான சந்திப்பைத் தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை சந்தித்து, பரணகம குழு தனது இடைக்கால விசாரணை அறிக்கையை கையளிக்கவுள்ளது.

நேற்றைய உதயன் ஐந்தாம் பக்கத்தில், "உள்ளக விசாரணையில் மாற்றங்கள் ஏற்படுமா?" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து..... என்று தவறு ஏற்பட்டு விட்டது என்பதை, வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

–ஆசிரியர்.

# விசாரணைகள் மேற்கொள்ள போதுமான வசதிகளில்லை

### லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கூறுகின்றனர்

கொழும்பு, ஜன.26

கடந்த காலத்தில் இந்த நாட்டில் இடம்பெற்றுள்ள ஊழல்கள், மோசடிகள் சம்பந்தமாக லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு ஏராளமான முறைப்பாடுகள் வந்து குவிந்துள்ள போதிலும் அந்த முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டு செல்வதற்கு போதுமான அளவுக்கு வசதிகள் இல்லாதிருப்பதாக அந்த ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த ஆணைக்குழுவில் தற்போதுள்ள 150 பேர் வரையிலான விசாரணை அதிகாரிகளுக்கு இரு உத்தியோக பூர்வ வாகனங்கள் மாத்திரமே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும், ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு உரிய இடங்களுக்குச் செல்வதற்கு அந்த போக்குவரத்து வசதிகள் எந்த விதத்திலும் போதுமானதல்ல எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

விசாரணைகள் தொடர்பாக தூரப் பிரதேசங்களுக்குச் செல்கையில் இருவெவ்வேறு பிரதேசங்களுக்குப் பயணிக்க வேண்டியுள்ள அதிகாரிகள் ஒரே வாகனத்தில் பயணித்துச் செல்ல வேண்டியிருப்பதாகவும் அவ்விதம் செல்வதற்கும் கூட குறைந்த பட்சமாக 6 அதிகாரிகளாவது இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அவ்விதம் தூரப் பிரதேசங்களுக்கு விசாரணைகளுக்காகச் செல்லும் அதிகாரிகள் தரப்பொன்றுக்கு நாளொன்றுக்குப் பிரயாணப் படியாக 5,000 ரூபா வென்ற சொற்பத்தொகையே வழங்கப்படுகின்றது என்றும் 6 பேர் கொண்ட குழுவொன்றுக்கு அந்தத் தொகை போதுமானதல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ந–22)

# மன்னாரில் விபத்து நான்கு பேர் காயம்



மன்னார், ஜன. 26

மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியில் நேற்று மாலை 3.50 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 4 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மன்னார் பொலிஸ் நிலையத்தின் அருகே பிரதான வீதியில் உள்ள நாற்சந்தியில் விபத்து இடம்பெற்றது.

மன்னார் பொலிஸ் நிலைய வீதி டெலிகொம் நிறுவனத்திற்கு முன்பாக ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து நேர்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் வந்தனர் என்றும் அவர்கள் போதையில் இருந்தனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளுடனான நேரடி மோதலைத் தவிர்ப்பதற்காக ஓட்டோ சாரதி அதனைச் சடுதியாக நிறுத்த முயன்றார். அது கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டுவிலகி விபத்துக்குள்ளானது என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஓட்டோ சாரதி கடும் காயங்களுக்கு உள்ளானார். அவரது ஓட்டோவும் கடுமையாகச் சேதமடைந்தது. மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேரும் காயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்தவர்களிடமிருந்த ஒரு தொகை டின் பியர்கள் வீதியில் சிதறிக் கிடந்தன என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவருக்குக் கால் முறிந்துள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. விசாரணைகளை மன்னார் பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ–56)




உ

அம்பாள் துணை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

**கும்பாபிஷேக தின விழா**

26.01.2015 திங்கட்கிழமை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலின் கும்பாபிஷேக தினமான 26.01.2015 அன்று மூலஸ்தான அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு ஸ்நபினாஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடை பெற்று விசேட பூசை நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவந்து இன்னருள் புரிவார் என்பதை அறியத்தந்து - அம்பாள் அடியார்கள் அனைவரையும் வருகை தந்து அம்பாளின் அருள்பெறுமாறு அன் போடு அழைக்கின்றோம்.

**அறங்காவலர் சபையினர்**

(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)

**மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்**

கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்

300 இற்கு மேற்பட்ட அழகுக்கலை நபர்களை உருவாக்கிய இப்பயிற்சி நிலையம் தனது 6 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மிகக் குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயிற்சிகளை வழங்கவுள்ளது. பயிற்சியில் இணைய விரும்புவோர் 30.01.2015 இற்கு முன்பு பதிவுகளை மேற்கொள்ளவும். பயிற்சிக் கட்டணம் ரூ.9000.00 காலம் -3 மாதம் பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். எயர்பிரஸனர், ஸ்பிறே, கிறியேற்றிப், ஒயிலி, ஸ்ரிக் அன்ட் கேக், ஈவினிங் ஆகிய மேக்கப் வகை அல்ராசொனிக் & கல்வனிக், பேசியல், பிம்பிள், பிளக்பொட், ஐ. டான்ரஃப், ஹென்னா, ஸ்பா ஆகிய றீட்மென்ட் முறைகள் றீ பொண்டிங், கேளிங், பேமிங்10 one day கேளிங், அயனிங், பஃபிங், பேமிங் முறைகள், ஹெயார் செற்றிங், கலறிங், ஒயிலிமசாஜ், பேமனட் நெயில்ஆட், நெயில் ஆட், மெகந்தி டிசைனிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், வக்சிங், ஸ்கின் அனலைசிங், ஸ்கிரப்பிங், கிளினப், பேஸ் கொலஸ்ரோல், றிமூவிங், சாறிரொப்பிங் 25 முறை, ஹெயாஸ் ரைல் (மொடோன்) 15 முறை, பிறைடல், டிரெஸ்சிங் (4) நெச்சுரல் மேக்கப், அடிசனல் மசாஜ், ஸ்ரோக் மசாஜ் T.C, சொக்கற் மசாஜ் திரெட்டில் மேலும் கேக் ஐசிங் (60), தையல், சாறிவேக்ஸ், ஹான்ட்வேர்க் பயிற்சிகள் நடைபெறும். ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பயிற்சி நெறிக்கு வயதெல்லை கிடையாது



மகளிர் மட்டும்.

தொடர்பு: 077 936 2642 (56149)(4.3) கோப்பாய், பழையவீதி.


## மரண அறிவித்தல்



### நாகேந்திரம் பேரின்பநாயகம்

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை வசிப்பிடமாவும் கொண்ட நாகேந்திரம் பேரின்பநாயகம் 24.01.2015 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் லச்சுமி தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும் சிவகௌரி (Physiotherapist, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கோகுலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் பகவதி, சந்திரோதயம், தனநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணி, காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இரத்தினகுமார், கமலநாயகி, நாகேஷ்வரன், இராஜேஸ்வரி, ஜெயராணி, இராஜேஸ்வரன், விக்னேஷ்வரன், ஞானேஷ்வரன், சண்முகராணி, இரட்னேஸ்வரன், வதனராணி ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி, இரட்ணம் செல்வநாயகம், இராஜநாயகி, பானுமதி, தேவரஞ்சனா, சிவகுமார், கலைமதி, இராஜேஸ்வரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2015) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

(F/19088)

தகவல்: குடும்பத்தினர்.

## கோத்தாவை

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ரத்துப்பஸ்வெல மக்கள் சுத்தமான குடிதண்ணீர் கோரி போராட்டம் நடத்தினர். அங்குள்ள தொழிற்சாலை ஒன்றால் நீர் மாசடைகின்றது என்றும், குறித்த தொழிற்சாலையை மூடுமாறும் மக்கள் கோரினர். அந்தப் போராட்டத்தை அப்போதைய அரசு இராணுவத்தினரைக் கொண்டு அடக்கியது. அப்போது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

இது தொடர்பில் பொதுமக்கள், மனித உரிமைகள் ஆணைக் குழு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்திருந்தபோதும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், ரத்துப்பஸ்வெல மக்கள் தமக்கு நீதி கோரி நேற்றுப் போராட்டம் நடத்தினர். கடந்த அரசால் – பாதுகாப்புச் செயலரால் – முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அன்றைய காலத்தில் உயிரைக் கொடுத்தும் தம்மால் நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் குறித்து கருத்து வெளியிட்ட குடிதண்ணீர் பாதுகாப்பு மக்கள் எழுச்சி அமைப்பின் ஏற்பாட்டாளர் பிரமித ஹெட்டியாராச்சி,

"முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, அந்த நேரத்தில் கடமையில் இருந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர், அப்பொழுது கடமையில் இருந்த இராணுவத் தளபதி அல்லது பதில் இராணுவத் தளபதி ஆகியோரை உடன் அழைத்து விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். கடந்த அரசில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து எமது மக்கள் திருப்தியடையப் போவதில்லை.

இது தொடர்பிலான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் நாம் முறைப்பாடொன்றை கையளித்துள்ளோம். எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று அரசுசை வலியுறுத்தியே மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்" – என்று தெரிவித்தார்.

(ற–5)

## வடக்கில் காணியை

இதற்கு மேலதிகமாக இலங்கையில் நடந்த படுகொலைகள், கடத்தல்கள் தொடர்பிலும் பொதுமக்களிடம் இருந்து தகவல்களைத் திரட்ட ஜே.வி.பி. கட்சி முடிவு செய்துள்ளது. பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் முயற்சி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது முறைப்பாடுகளைத் தமிழ் மொழியிலேயே மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென மூவர் அடங்கிய விசேட குழுவை ஜே.வி.பி. நியமித்துள்ளது. இது தொடர்பில் விளக்கமளிக்கும், செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நலிந்த ஜயதிஸ கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

ராஜபக்ஷ ஆட்சியில் பாதிப்புக்குள்ளானோர், பழிவாங்கல்களுக்கு உள்ளானோர் தொடர்பில் தகவல் திரட்டும் குழு என்ற பெயரில் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

"புதிய ஆட்சி மலர்ந்துள்ள நிலையில், முன்னாள் ஆட்சியில் இடம்பெற்ற மக்கள் சொத்து கொள்ளையடிப்பு மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தி, நீதியை நிலை நாட்டுவதற்குத் தேசிய நிறைவேற்றுச் சபை மற்றும் நாடாளுமன்றத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ள ஜே.வி.பி அழுத்தங்களைப் பிரயோகிக்கும். எனவே கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தகவல்களை வழங்க முடியும்." ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

காணிகளை இழந்த மக்கள், சொத்து மற்றும் வணிகத்தை இழந்தோர், அரச சேவையாளர்கள், தொழிற்சங்கவாதிகள், கொரிய வேலை வாய்ப்பில் மோசடியாக ஏமாற்றப்பட்டோர், ஊடகவியலாளர்களின் பிரச்சினை, படுகொலை செய்யபட்டவர்கள், கடத்தல்கள், மாணவர்களின் பிரச்சினை, கலைஞர்களுக்கு எதிரான செயற்பாடுகள், விளையாட்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீடு ஆகியவை குறித்து முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் மேற்படி குழுவுக்கு, இல.43/20, நுகசா பகுதி, பிலியந்தலை வீதி, மஹரகம என்ற முகவரிக்கோ அல்லது 0112896394 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ தரவுகளையும் முறைப்பாட்டையும் அனுப்பி வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ–5)

## வடக்கு

போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வர்த்தக வாணிபம், வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், அமைச்சர் ராஜித சேனாரத்னவை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்ததாவது:

வட மாகாணத்தில் நிலவுகின்ற சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்து, வட மாகாண சுகாதாரத் துறையை சுதேச வைத்தியத் துறையையும் துரித மாக அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

வடக்கில் நிலவுகின்ற வைத்தியர் மற்றும் தாதிமார் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறும், வட மாகாணத்தின் கிராமப் புறங்களில் காணப்படுகின்ற வைத்தியசாலைகளில் வைத்தியர் மற்றும் தாதிமார் பற்றாக்குறையினால் கிராம மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதையும் சுட்டிக்காட்டினேன். எனவே இவ்வாறான பிரச்சினைகளை வட மாகாணத்தில் நிவர்த்தி செய்யுமாறும் கேட்டுக் கொண்டேன். மேலும் சுகாதார அமைச்சரை வட மாகாணத்துக்கு நேரடியாகப் பயணம் மேற்கொண்டு வைத்தியசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை கேட்டறிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டேன்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்காலத்தில் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் வட மாகாண மீன்பிடி அமைச்சின் ஆளுகைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பான மத்திய அமைச்சர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை எதிர்வரும் நாள்களில் செய்து தருவதாகவும் அவர் உறுதிமொழி வழங்கினார் – என்றார்.

(உ–5)

## ஐ.நாவை

போர்க் குற்றம் குறித்த எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது தொடர்பிலான விவாதமும் இடம்பெறவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனால் இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தைக் கையாள்வதற்கு புதிய அரசு திட்டங்களை வகுத்துள்ளது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன், நேரடியாகப் பேசி அதைச் செயற்படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளது. அதற்காக இராஜதந்திரியான ஜயந்த தனபால ஜெனிவாவுக்கு நேற்றுப் பயணமாகியுள்ளார்.

"கடந்த அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் முரண்பட்டுக் கொண்டது. ஐ.நா விசாரணையாளர்களை இலங்கைக்குள் அனுமதிக்கவில்லை. நாம் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்நாட்டு விசாரணை நடத்தவுள்ளோம்"– என்று இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதி மைத்திரிபாலவின் பிரதிநிதியாக ஐ.நாவுக்குச் செல்லும், ஜயந்த தனபால, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துப் பேசிய பின்னரே நிலைமை எதுவென்பதைச் சொல்ல முடியும்"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முன்னைய அரசின் குறைபாட்டால் இந்த விசாரணைக்கு நாடு முகம் கொடுக்க நேரிட்டது. கவனமாகவும் – யதார்த்தமாகவும், இந்த விவகாரம் கையாளப்பட்டிருந்தால், விசாரணையை தவிர்த்திருக்க முடியும்"– என்றும் மங்கள சுட்டிக் காட்டினார்.

(ற–5)

## கடலில்

கூடி அதனை வேடிக்கை பார்த்தனர்.

அத்துடன் இதுகுறித்து பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, அங்கு வந்த அவர்களும் அந்தப் பொருளை பார்வையிட்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற)

## மனித உரிமைகள்

கிடைக்கும் என்றே எதிர்பார்க்கிறோம்" என்றார் அயலுறவுத்துறை பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா.

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் கொண்டுள்ள மனப்பதிவுகளை மாற்றுவதற்குத் தமது அரசு முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் கொண்டிருக்கக்கூடிய கரிசனைகளுக்குப் பதிலளிக்கும் வகையிலான புதிய நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அளிப்பது தொடர்பிலும் அரசு கவனம் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ)

## 100 நாள்

அச்சுறுத்தல் இருந்தது என்றும் தெரிவித்த அவர், தனது குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை இருந்ததையும் தான் அறிந்திருந்தார் எனக் கூறினார்.

எப்படி இருந்தாலும் மக்களும் தன்னை ஆதரித்த அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளும் . தனது வெற்றியை உறுதிப்படுத்தின என்றார் அவர்.

தன்னுடைய 100 நாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு வேண்டும்என்ற காரணத்தாலேயே அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தான் முடிவு செய்தார் என்றும் அவர் அந்தக் கூட்டத்தில் விளக்கம் அளித்தார்.

அரசமைப்பு மாற்றங்களைக் கொண்டுவரவேண்டுமானால் நாடாளுமன்றத்தில் தனக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று தெரிவித்த மைத்திரிபால, அது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் இணைந்தே தான் பணியாற்ற வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்தார்.

(உ)

## மேலும் பல

தும் நடவடிக்கைகளும் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் மின்உற்பத்தி நிறுவனத்தால் கடந்த காலங்களில் வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில், நிலத்தடி நீருடன் கலந்ததால், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில், பல கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தற்போது, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு இடங்களிலும் – கிணறுகளில் – கழிவு ஒயில் கலந்துள்ளது என்று அறியப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. அதையடுத்தே தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவின் குறிக்கப்பட்ட 20 இடங்களின் கிணற்று நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

கிணறு முழுமையாக இறைக்கப்பட்ட பின்னர், இந்த நீர் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. அவை உடனடியாகவே பரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றன. பரிசோதனை முடிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், கழிவு ஒயில் பரவியுள்ள பிரதேசங்களை உறுதியாக அடையாளம் காண முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற–5)

## தமிழ் அரசியல்

நேற்று வடமராட்சியில் நடத்தப்பட்டது.

வடமராட்சி திக்கம் மடத்து வாசல்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற இந்த யாகம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் வடமராட்சி பிரதேச ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை 9 மணிக்கு தொடங்கிய யாகம் மதியம் வரை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. யாகத்தை மடத்து வாசல் ஆலய பிரதம குரு நிகழ்த்தினார்.

இந்த யாகத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், கஜதீபன், சிவயோகன், பரஞ்சோதி, ஆர்னோல்ட் , பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் பூ.சஞ்சீவன், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாகத்தைத் தொடர்ந்து மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (ற–109)



# ஹியூக்ஸ் வழியில் ஹியூக்ஸ்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேனியல் ஹியூக்ஸ், பவுன்ஸர் பந்து தாக்கியதில், நூலிழையில் உயிர் தப்பினார்.

கடந்த ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி அபாட் வீசிய பவுன்சர் தாக்கியதில் 'கோமா' நிலைக்கு சென்ற ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ், கடைசி வரை நினைவு திரும்பாத நிலையிலேயே மரணம் அடைந்தார். தற்போது, இரண்டு மாதங்கள் கழித்து, இதேபோன்ற மற்றொரு சம்பவம் ஆஸ்திரேலியாவில் நடந்துள்ளது.

சிட்னியில் நடைபெற்றுவரும் உள்ளூர் ஆட்டத்தில் பவுன்ஸர் பந்தை எதிர்கொண்டார் டேனியல் ஹியூக்ஸ்.பந்து அவரது பின் கழுத்தில், ஹெல்மெட்டுக்கு கீழ் பகுதியில் பலமாக தாக்கியது. உடனே கழுத்துப் பகுதியில் பலமான வீக்கம் ஏற்பட்டது. அதில் நினைவிழந்து மயங்கிய டேனியல், மிக அருகிலிருந்த ஹார்ன்ஸ்பை மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு 'சிடி ஸ்கேன்ஸ்' மூலம் தலையில் சோதனை நடத்தப்பட்டது. முடிவில், காயம் பெரியளவில் இல்லாத நிலையில், சகஜ நிலைக்குத் திரும்பினார். டானியல் ஹியூக்ஸ் நலமாக உள்ளதனை மருத்துவர்கள் உறுதிசெய்துள்ளனர்.

கடந்த நவம்பரில் இதே சிட்னியில் தான் பிலிப் ஹியூக்ஸ் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு நினைவுதிரும்பாமல் உயிரிழந்தார். பிலிப் ஹியூக்ஸிற்கு அடிபட்ட அதே இடத்தில் சில மில்லிமீற்றர்கள் தள்ளி அடிபட்டதால் டானியல் உயிர்தப்பினார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். பிலிப் ஹியூக்ஸ்ஸிற்கு அடிபட்டு இரண்டு மாதங்களின் பின்னர் ஹியூக்ஸ் என் னும் பெயரைக்கொண்ட மற்றுமொரு வீரரான டானியல் ஹியூக்ஸ் பவுன்ஸரினால் தாக்கப்பட்டுள்ளமை ஆஸ்திரேலிய மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இது குறித்து டேனியல் ஹியூக்ஸின் காதலி, சேனல் 9 தொலைக்காட்சி செய்தியாளர் எரின் மோலன் கூறுகையில், 'பவுன்ஸர் தாக்கியதால், டேனியல் தலையில் பந்து அளவுக்கு ஒரு கட்டி உருவாகியுள்ளது. ஆனால், பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை. மறைந்த வீரர் பிலிப் ஹியூக்ஸுடன் பல்வேறு ஜூனியர் ஆட்டங்களில் டேனியல் விளையாடி உள்ளார். தவிர, இருவருமே 'ஹியூக்ஸ்' என்ற ஒரே துணைப் பெயர் கொண்டவர்கள். இதை என்னால் நம்பவே முடியவில்லை,"– என்றார். (ற–ரி)

## ஆஸ்திரேலியா, இந்தியா இன்று பலப்பரீட்சை. இந்தியாவுக்கு நெருக்கடி.

ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் தற்பொழுது நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டத்தில் இன்று ஆஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் மோதுகின்றன.

இதுவரை நடந்து முடிந்த ஆட்டங்களின் பெறுபேறுகளின் படி ஆஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது. இறுதியாட்டத்தில் விளையாடும் மற்றைய அணி எது என்று உறுதியாக எதிர்வுகூறமுடியாத அளவிற்கு இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் போட்டி நிலவுகின்றது. இதனால் இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றால் இங்கிலாந்து இறுதி ஆட்டத்திற்கு முன்னேறிவிடும். மாறாக இந்தியா வெற்றிபெற்றால் இறுதி ஆட்டத்திற்கு செல்லும் அணி எது என்பதை தீர்மானிக்கும் விறுவிறுப்பான ஆட்டமாக முத்தரப்பு தொடரின் இறுதி லீக் ஆட்டமான இந்தியா, இங்கிலாந்து ஆட்டம் அமையும். இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளப்போகும் அணி எது என்புதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (ற–ரி)



# கை கொடுத்தார் சிமித்; வென்றது ஆஸ்திரேலியா



சிமித்தின் நம்பிக்கையான சதம் கைகொடுக்க முத்தரப்பு தொடரின் நான்காவது ஆட்டத்தில் 3 இலக்குகளால் இங்கிலாந்தை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது ஆஸ்திரேலியா.

ஏற்கனவே நடந்து முடிந்த முதல் சுற்றில் ஆஸ்திரேலிய அணி 9 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் இங்கிலாந்து 5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன. இந்தியா முதல் சுற்றின் சகல ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததால் புள்ளிப்பட்டியலை ஆரம்பிக்கவே இல்லை. இதனால் நேற்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றால் ஆஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும். மாறாக இங்கிலாந்து அணி வெற்றிபெற்றால் இந்திய அணி இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும். இதனால் எந்த அணிகள் இறுதி ஆட்டத்தில் விளையாடப்போகின்றன என்பதனை தீர்மானிக்கும் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்திருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்கள் அணிக்கு சிறந்த பலத்தினை அமைத்துக் கொடுத்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 113 ஆக இருந்தபோது இங்கிலாந்தின் முதல் இலக்காக அலி 46 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து ரெய்லர் 5 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் றூட் பெல்லுடன் கூட்டுசேர இங்கிலாந்து அணி பலம்பெற ஆரம்பித்தது. இருவரும் இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களை குவித்தனர். மறுமுனையில் பெல் சதம் கடந்து அசத்தினார். இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை 253 ஆக இருந்த பொழுது பெல் 141 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்வரிசை வீரர்கள் எவரும் குறிப்பிடும் அளவுக்கு பெரிதாக பிரகாசிக்கவில்லை. 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 8 இலக்குகள் இழப்பிற்கு 303 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக சண்டு 2 இலக்குகளையும் கும்மின்ஸ், ஸ்ராக், பல்க்நெர் மற்றும் கென்றிஹியுஸ் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு பின்ச் மற்றும் மார்ஷ் நம்பிக்கையான தொடக்கம் கொடுத்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 76 ஆக இருந்த பொழுது பின்ச் 32 ஓட்டங்களுடன் வெளியேறினார். சிறிது நேரத்திலேயே சக தொடக்க வீரரான மார்ஷ் 45 ஓட்டங் களுடன் வெளியேறினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்தி லேயே வைற் எந்த ஓட்டங்க ளையும் பெறாது வெளியேற ஆட்டத்தில் இங்கிலாந்தின் ஆதிக் கம் மேலோங்க ஆரம்பித்தது.

ஆயினும் மறுமுனையில் போராடிக் கொண்டிருந்த சிமித்திற்கு மத்தியவரிசை விரர்களான மக்ஸ்வெல் (37), பல்க்நெர் (35), மற்றும் கெடின் (42) சீரான பங்களிப்பினை வழங்க ஆஸ்திரேலிய அணி வெற்றியை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது. இறுதிநேரத்தில் கெடின் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் சதம் கடந்து நம்பிக்கை



தந்த சிமித் ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு வித்திட்டார். முடிவில் அந்த அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களை சந்தித்து 7 இலக்குகளை இழந்து 3 இலக்குகளால் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பின், அலி மற்றும் வோக்ஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலியாவின் சிமித் தெரிவானார்.

முத்தரப்பு தொடரின் ஐந்தாவது ஆட்டத்தில் நாளை ஆஸ்திரேலிய, இந்திய அணிகள் மோதுகின்றன. (ற–ரி)




அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடை பெற்ற ஆண்களுக்கான பத்து கிலோ மீற்றர் தூர வீதி ஓட்டப் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலையில் இடம் பெற்றது. அதில் ர.கண்ணன் கி. ஜெயதாஸ் ஆ.குபேரன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர். இந்தப் போட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ற-86)

# நியூஸிலாந்து அணி அபாரவெற்றி தொடரை பறிகொடுத்தது இலங்கை



அண்டர்சனின் சகலதுறையாட்டம் கைகொடுக்க 120 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தி தொடரினை தன்வசப்படுத்தியது நியூஸிலாந்து அணி.

நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 7 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் ஆறாவது ஆட்டம் நேற்றையதினம் நியூஸிலாந்தின் டன்டின் மைதானத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதல் ஐந்து ஒருநாள் ஆட்டங்களில் நியூஸிலாந்து அணி 3 ஆட்டங்களிலும் இலங்கையணி ஒரு ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. மீதமுள்ள இரண்டு ஆட்டங்களில் ஏதாவது ஒன்றில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றாலும் தொடர் நியூஸிலாந்திடம் சென்றுவிடும். இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றும் எண்ணத்தில் நியூஸிலாந்தும், தொடரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கையும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அணித்தலைவர் மக்கெலம் ஓட்டம் எதனையும் பெறாது வெளியேறி சரிவைக் கொடுத்தார். தொடர்ந்து கப்ரிலும் 28 ஓட்டங்களுடன் வெளியேற நியூஸிலாந்து அணி 59 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தவித்தது. வில்லியம்சன் மற்றும் ரெய்லர் வழக்கம் போல் இணைப்பாட்டத்தை ஆரம்பித்து அணியின் சரிவுகளைச் சரிசெய்யத் தொடங்கினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 176ஆக இருந்த பொழுது வில்லியம்சன் 97 ஓட்டங்களுடன் தன் பணியை முடித்துக்கொண்டார். தொடர்ந்தும் சிறப்பாக ரெய்லர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை 254 ஆக உயர்த்திவிட்டு 96 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். பின்வரிசை வீரர்களும் தம்மால் இயன்ற அதிரடியைக் கையிலெடுக்க நியூஸிலாந்து அணி 50 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைக் குவித்தது.

பந்து வீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 2 இலக்குகளையும், கேரத், பெரேரா மற்றும் டில்சான் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

316 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்னும் எட்டக்கூடிய



இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்களான டில்சான் மற்றும் திரிமன்னே போதிய அடித்தளத்தினை அமைத்துக் கொடுத்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 56 ஆக இருந்தபொழுது டில்சான் 21 ஓட்டங்களுடன் விடைபெற்றார். தொடர்ந்து திரிமன்னேயும் 29 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பு குறைந்தது. வழக்கம் போல் சங்கா மறுமுனையில் போராடிக் கொண்டிருந்தாலும் மத்தியவரிசை, பின்வரிசை வீரர்கள் அனைவரும் வந்த வேகத்திலேயே திரும்பினர். மஹேல 9, சந்திமல் 9, மென்டிஸ் 3, பெரேரா 2, பிரசாத் 2, லக்மல் 3 என படபடவென பவிலியன் திரும்பினர். மறுமனையில் அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த சங்காவும் 81(66) ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணி 40.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே பெற்று 120 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக அண்டர்சன் 4 இலக்குகளையும் மக்கெல்நாதன் 2 இலக்குகளையும் பௌல்ற் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அண்டர்சன் தெரிவானார்.

7 ஆட்டங்களைக் கொண்ட தொடரை நியூஸிலாந்து அணி 4;1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஏழாவது ஒருநாள் ஆட்டம் வெலிங்ரன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ற-ரி)

# அடித்து நொறுக்கும் அசரென்கா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அதிரடியாக விளையாடி வரும் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா நேற்று தொடர்ந்து 3ஆவது ஆட்டத்தில் வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் தரவரிசையில் முன்பு முதலிடத்தில்இருந்தஅசரென்கா இப்போது 44ஆவது இடத்தில் உள்ளார். கடந்த ஆண்டு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சுமார் 16 முக்கிய ரென்னிஸ் தொடர்களில் அவர் பங்கேற்கவில்லை. இதனால் தரவரிசையில் பெரும் பின்னடைவை சந்தித்தார். இந்த நிலையில் தற்போது மெல்பேர்ணில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் அசரென்கா தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடி எதிர்த்து விளையாடும் வீராங்கனைகளை வீழ்த்தி வருகிறார்.

கரோலின் வோஸ்னியாகியை வெற்றி பெற்ற பிறகு மைதானத்திலேயே உற்சாகமாக நடனமாடி ரசிகர்களை அசரென்கா மகிழ்வித்தார். பின்னர் இது தொடர்பாக பேசிய அவர், 'நடனமாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். நான் டி.வி.யில் ரென்னிஸ் ஆட்டத்தினை பார்க்கும் போது ரசிகர்கள் நடனமாடிக் கொண்டே ஆட்டத்தினை ரசிப்பதை பார்த்திருக்கிறேன். அப்போது நானும் டி.வி. முன்பு நடனமாடுவேன். அது மனதுக்கு மிகுந்த உற்சாகம் அளிக்கும் இப்போது ரசிகர்களை மகிழ்விக்க ஆடுகளத்தில் நடனமாடினேன்' என்று கூறினார். (ற-ரி)



# 250 கோடிக்கான இறுதி எச்சரிக்கை

மே.இ.தீவுகள் துடுப்பாட்ட அணி கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இதன்போது மே.இ.தீவுகளின் துடுப்பாட்ட சபையுடன் ஏற்பட்ட சம்பள பிரச்சினை காரணமாக மே.இ.தீவுகள் அணி தொடரை பாதியில் முறித்து கொண்டு நாடு திரும்பியது. இந்த பிரச்சினையால் இந்திய கிரிக்கெட் சபை, மே.இ.தீவுகள் சபையுடனான தனது உறவை துண்டித்துக் கொண்டது. அத்துடன் போட்டி ரத்து செய்யப்பட்டதால் ஏற்பட்ட இழப்பீடாக ரூ.250 கோடி தர வேண்டும் என்று மே.இ.தீவுகள் கிரிக்கெட் சபைக்கு, கடிதம் எழுதி இருந்தது. கடந்த அக்டோபர் 31ஆம் திகதி இந்த கடிதம் அனுப்பப்பட்டது. 40 தினங்களுக்குள் இதற்கு பதில் அளிக்க வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரை மே.இ.தீவுகள் கிரிக்கட் சபை எந்த பதிலும் அளிக்காததால், இந்திய கிரிக்கெட் சபை மீண்டும் ரூ.250 கோடி நஷ்ட ஈடு கேட்டு இறுதி எச்சரிக்கை அனுப்பி இருக்கிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி வரை மே.இ.தீவுகள் சபைக்கு கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்குள் பதில் அளிக்காவிட்டால் சட்ட ரீதியான நடவடிக்கையை இந்திய கிரிக்கெட் சபை மேற்கொள்ளும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ற-ரி)

# செய்திகள்



## விற்கப்படுமா சென்னை சூப்பர் கிங்ஸ்?

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பான வழக்கில் இந்திய உயர் நீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பால் ஐ.பி.எல். அணியை விற்பதற்கு என். சீனிவாசன் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கிரிக்கெட் சபைத் தலைவராகவும், ஐ.பி.எல். அணி உரிமையாளராகவும் இரட்டை பதவி வகித்ததன் மூலம் லாப நோக்கில் இரட்டை நலன்களுக்கான சூழ்நிலைகளை அவர் ஏற்படுத்தி விட்டார் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து ஒதுங்கி இருக்கும் என்.சீனிவாசனுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

கிரிக்கெட் சபை அல்லது ஐ.பி.எல். ஏதாவது ஒன்றை மட்டுமே அவர் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதில் அவர் கிரிக்கெட் சபையைத் தெரிவு செய்து ஐ.பி.எல். அணியை கைவிட முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.


ஐ.பி.எல். அணியான சென்னை சூப்பர் கிங்ஸின் உரிமையாளராக என்.சீனிவாசனின் நிறுவனமான இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் தனது அணியை விற்க முடிவு செய்து கிரிக்கெட் சபையிடம் இந்த வாரம் அனுமதி கேட்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


6 வாரத்துக்குள் கிரிக்கெட் சபைத் தேர்தலை நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் அதற்கு முன்பாக இந்த நடைமுறைகள் மேற் கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. (ற)

## அக்னிப் பரீட்சையில் தேறுவாரா அஜ்மல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் 37 வயதான சயீத் அஜ்மல் பந்து வீச்சு சர்ச்சையில் சிக்கினார். பந்து வீசும் போது, சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (ஐ.சி.சி.) அனுமதித்துள்ள 15 டிகிரி கோணத்திற்கு மேல் அவரது முழங்கை வளைவது தெரியவந்ததால், கடந்த செப்டம்பர் மாதம் முதல் பந்து வீச தடை விதிக்கப்பட்டது. இதனால் அவரது உலகக்கிண்ண கனவு தகர்ந்தது. இருப்பினும் அஜ்மலின் பந்துவீச்சின் தேவையை உணர்ந்த பாகிஸ்தான் கட்டுப்பாட்டுச்சபை உலகக்கிண்ண அணியில் அஜ்மலின் பெயரை நிபந்தனையின் அடிப்படையில் சேர்த்துக் கொண்டதுடன் தீவிர பந்துவீச்சு பரிசோதனையில் அஜ்மலினை ஈடுபடுமாறு பணித்தது. இந்த வாய்பினை பயன்படுத்திக்கொண்ட அஜ்மல் தனது பந்து வீச்சு குறைகளை நிவர்த்தி செய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார் அதன் ஒரு கட்டமாகவே இந்தியாவுக்கு வந்தார்.

சென்னை போரூரில் உள்ள ஐ.சி.சி.யால் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மையத்தில் நேற்று அஜ்மலின் பந்து வீச்சு அதிகார பூர்வமாக பரிசோதிக்கப்பட்டது. 350 வகையான நிலைகளில் எடுக்கப்பட்ட அவரது பந்து வீச்சு, அங்குலம் அங்குலமாக ஆய்வு செய்யப்படும். இதன் முடிவு அடுத்த 10 நாட்களுக்குள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இந்த இறுதி சோதனையிலும், அவரது பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டால் அடுத்த 12 மாதங்களுக்கு அவரால் பந்து வீச முடியாது.(ற–ரி)





## இலங்கை அணி மகிழ்ச்சியளிப்பதாக இல்லை

**-சனத் ஜெயசூரியா**

உலகக்கிண்ணத் தொடருக்கு இலங்கை அணியை தயார் செய்வது மகிழ்ச்சிகரமாக இல்லை என தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா கவலை வெளியிட்டுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் சில தினங்களே உள்ளன. இதற்கு முன்னதாக இலங்கை அணி நியூஸிலாந்து சுற்றுப்பயணம் செய்து அந்த அணியுடன் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது. இந்த தொடரில் ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்ற இலங்கை அணி 1–4 என்ற கணக்கில் தொடரை இழந்துள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கை அணி குறித்து சனத் ஜெயசூரியா கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

"நியூஸிலாந்தில் இலங்கை அணியின் செயல்பாடால் நான் 100 சதவிதம் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறேன்.சிலவாரங்களில் அணியில் முன்னேற்றத்தை கொண்டு வர வேண்டும். ஒரே ஒரு நல்ல விடயம் என்னவென்றால் நியூஸிலாந்து அணிக்கு எதிராக தற்போது விளையாடிக் கொண்டிருப்பது. அந்த அணியை நியூஸிலாந்தில் எதிர்கொள்ள எளிதாக இருக்கும்.

அதே போல உலகக்கிண்ணத் தொடரில் தொடக்க போட்டியையும் எளிதாக கையாள முடியும்"– என்று தெரிவித்துள்ளார். (ற)

## களமிறங்குவாரா லசித் மலிங்க?

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மலிங்கவின் உலகக்கிண்ண செயல்பாடு குறித்து மஹேல ஜெயவர்த்தனே கருத்து வெளியிட்டுள்ளார்,

கடந்த செப்ரெம்பர் மாதம் கணுக்கால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட மலிங்கா, தற்போது மெதுவாக குணமடைந்து வருகிறார். இவர் உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பாரா என்பது தொடர்பாக சந்தேகம் எழுந்தவாறு உள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து தனது டுவிட்டர் இணையத்தளத்தில் கருத்து தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்த்தன;

"மலிங்க கடந்த சில நாள்களுக்கு முன்னரே பந்து வீச ஆரம்பித்து விட்டார். இதுவரையில் அவருக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. எனினும் உலகக்கிண்ணத் தொடரில் களமிறங்குவதற்கு முன்னர் விளையாட முடியுமா என நூறு சதவீதம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதே சமயம் உலகக்கிண்ணத் தொடரில் களமிறங்க தயாராகிடுவார் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குள்ளது" – என்று தெரிவித்துள்ளார். (ற)



## 4ஆவது நிலையே கோஹ்லிக்கு சிறந்தது

இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித்தலைவர் கோஹ்லி எந்த நிலையில் இறங்கினாலும் சிறப்பாக செயல்படுவார் என்று விவ் ரிச்சர்ட்ஸ் கூறியுள்ளார்.

முத்தரப்பு ஒருநாள் தொடரில் 9, 5 ஓட்டங்கள் என தடுமாறி வரும் கோஹ்லியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர அவரை 3ஆம் நிலையை விடுத்து, 4ஆம் நிலையில் களமிறக்குவது குறித்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதனை ஆதரித்த விவ் ரிச்சர்ட்ஸ் கூறுகையில்,

"பவுன்ஸ் சற்று கூடுதலாக இருக்கும் ஆஸ்திரேலிய களத்தில் சில துடுப்பாட்டக்காரர்கள், குறிப்பாக முதல் 3 நிலையில் களமிறங்குபவர்கள் சோபிக்க முடியாமல் போக வாய்ப்புள்ளது.



அதனால் விராட் கோஹ்லியை 4ஆம் நிலையில் இறக்குவதில் அர்த்தமிருப்பதாகவே கருதுகிறேன். 4ஆம் நிலையில் இறங்கும் போது சூழ்நிலைக்கு ஏற்ப அவர் தனது இன்னிங்ஸை சரியான பாதையில் கொண்டு செல்ல வாய்ப்புள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடினாலும், இலக்கைத் துரத்தினாலும் ஆட்டத்தின் போக்கைக் கணித்து அதற்கேற்ப தன் ஆட்டத்தை அமைத்துக்கொள்ள 4 ஆம் நிலை சிறந்தது"– என்று தெரிவித்தார். (ற)




SPOKEN ENGLISH

O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 01.02.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00

பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"

யாழ்நகர் 021 320 33 13

சங்கானை 021 567 41 33

நெல்லியடி 021 3200 607

SAAMSON LANGUAGE SCHOOL

யாழ்நகர். 077 621 4567 021 320 3313


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.